

விசாக விழாவில் விஜயா பதிப்பகம்
திரு. மு. வேலாயுதம் அவர்களுக்கு
திருவருள்திரு குருமகாசன்னிதானம் அவர்கள்
"பதிப்புக் கலைமாமணி" பட்டம் வழங்கிச்
சிறப்பித்த நிகழ்வு. நாள் : 21-5-2016

மக்கள் சிந்தனை

சமய சமுதாய இலக்கிய
திங்களிதழ்

திருவள்ளுவர் ஆண்டு 2047 சித்திரை - ஆனி
மே - ஜூலை 2016

சிறப்பாசிரியர் : தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

மக்கள் சிந்தனை

சமய சமுதாய இலக்கிய திங்களிதழ்

சிறப்பாசிரியர் : தவத்திரு பொன்னம்பல அடிகளார்

விவரம்	அளவு	1 வெளியீடு	12 வெளியீடு
பின்அட்டை வெளிப்புறம்	1 பக்கம்	ரூ. 750	ரூ. 7500
அட்டை உட்புறம்	1 பக்கம்	ரூ. 650	ரூ. 6500
இதழ் உட்புறம்	1 பக்கம்	ரூ. 500	ரூ. 5000
இதழ் உட்புறம்	½ பக்கம்	ரூ. 350	ரூ. 3500

சந்தா விவரம்

தனி இதழ் ரூ. 8.00 ஆண்டுச்சந்தாரூ. 90.00
ஆயுட் சந்தாரூ. 1000.00 புரவலர் கட்டணம்ரூ. 2000.00

சந்தா – விளம்பரம் அனுப்பவேண்டிய முகவரி :

நிர்வாகி / மக்கள் சிந்தனை

குன்றக்குடி – 630 206, சிவகங்கை மாவட்டம்

இந்தியன் வங்கி, பிள்ளையார்பட்டி கணக்கு எண் : 554267544 மூலமும் மணியார்டர், வங்கி வரைவோலை / காசோலை மூலமும் அனுப்பலாம்.

ஆதீன இணையதள முகவரி : website : www.kkmutt.org

ஆசிரியர் : மரு. பரமகுரு

நமது 46ஆவது மகாசந்நிதானம் அவர்களின் நாண்மங்கல விழா

நாள் : 05.07.2016 செவ்வாய்கிழமை

காலை 7.15	பூஜைமடம் வழிபாடு
8.15	அருள்தரு சண்முகநாதர் திருக்கோயில் வழிபாடு
பகல் 12.30	45ஆவது குருமகாசந்நிதானம் அவர்கள் குருமூர்த்தம் வழிபாடு
01.00	மகேஸ்வரபூஜை

தாங்கள் வந்திருந்து குருவருள் பெற வேண்டுகிறோம்!

– மேலாளர், திருவண்ணாமலை ஆதீனம்

அச்சிட்டு வெளியிடுவோர் : ஸ்ரீ சண்முகநாதன் அச்சகம், குன்றக்குடி

மக்கள் சிந்தனை

நிறுவனர் : தவத்திரு குன்றக்குடி அடிகளார்

திருவள்ளுவர் ஆண்டு 2046 மாதம் : சித்திரை - ஆனி

மலர் : 30 இதழ் : 4 - 6

திருக்குறளால் இளைய தலைமுறையைச் செதுக்குவோம்

திருக்குறள் 37 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. ஆங்கிலத்தில் மட்டும் 40க்கும் மேற்பட்ட மொழிபெயர்ப்புகள் வெளிவந்துள்ளன.

நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் திரு. தருண் விஜய் அவர்களின் அரும்பெரும் முயற்சியால் திருக்குறள் நாடாளுமன்ற வளாகத்தில் ஒலித்தது. இன்று திரு. தருண் விஜய் அவர்களின் பெருமுயற்சியால் திருவள்ளுவர் சிலை உத்திரகாண்ட் மாநிலம் அரித்துவாரில் கங்கைக்கரையில் நிறுவப்படவுள்ளது.

திருக்குறளுக்கு இதுவரை முந்நூறு பேர் உரை எழுதியுள்ளனர்.

செக் மொழி, டச் மொழி, ஆங்கிலம், பின்லாந்து மொழி, பிரஞ்சு, ஜெர்மன், ஹங்கேரி மொழி, இத்தாலி, லத்தீன், நார்வீஜியன், போலிஷ், ருஷ்ய மொழி, ஸ்பெயின், சுவிஷ்டி மொழி என 14 ஐரோப்பிய மொழிகளிலும்,

சீனம், ஜப்பான், பர்மீயம், அரபு, பீஜி, கொரிய மொழி, மலாய், சிங்களம், உருது என 9 ஆசிய மொழிகளிலும்,

அசாமிய மொழி, வங்க மொழி, குஜராத்தி, இந்தி, கன்னடம், கொங்கணம், மலையாளம், மராத்தி, ஒரியா, ராஜஸ்தானி, பஞ்சாபி, சமஸ்கிருதம், சௌராஷ்டிரா, தெலுங்கு என 14 இந்திய மொழிகளிலும் ஆக 37 மொழிகளில் திருக்குறள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

மொழி பெயர்ப்புகளுக்காக மட்டும் திருக்குறள் பேசப்படவில்லை. மனித மனங்களில் நின்று ஆளும், வாழ வழிகாட்டும் நிலைக்காகவே பேசப்படுகின்றது! சிந்திக்கப்படுகின்றது.

கம்பனின் இராமகாதையில் தன் நாட்டை தசரதன் எப்படி நிர்வகிக்கின்றான்? காக்கின்றான்? என்பதைக் கம்பர் அருமையாகக் குறிப்பிடுகின்றார்.

வையகம் முழுவதும் வறிஞன் ஓம்பும்ஓர்
செய்எனக் காத்து இனிது அரசு செய்கிறான்.

வறியவன் ஒருவன் தன் சிறிய நிலத்தை தன் உயிரைப் போல எப்படி எல்லாம் காத்துப் பராமரிப்பானோ, அதைப்போல தசரதன் தன் ஆட்சிப் பரப்பிலுள்ள வையகம் முழுவதையும் காக்கின்றான் என்று குறிப்பிடுகின்றார்.

பரதன் இராமனைச் சந்தித்து ஆட்சி ஏற்றுக் கொள்ள அழைக்கின்றான். அப்பொழுது பரதனுக்கு இராமன் கூறும் ஆட்சி நிர்வாகம் பற்றிய ஆலோசனை உலகின் எந்தப் பகுதியை ஆள்வோருக்கும் தேவையான ஆலோசனை.

இராமன் பரதனுக்கு கூறும் அறிவுரை :
தகுந்த காலத்தில் படுக்கிறாயா?
தகுந்த காலத்தில் விழிக்கிறாயா?
நேரத் திட்டமிடுதல் பற்றி விளக்குகின்றார்.

ஒருவருடனோ, பலரிடமோ அரசு செயல்களை ஆலோசிக்காமல் இருக்கிறாயா?

ஒருவனாக யோசித்தால் விருப்பு வெறுப்புக்கு ஏற்ப முடிவு எடுக்க நேரிடும்!

அதிகமானவர்களுடன் ஆலோசித்தால் கருத்து ஒருமை ஏற்படுவது கடினம்! அரசு இரகசியமும் வெளியே கசியும்!

நம்மைச் சுற்றி யாரை வைத்துக் கொள்ள வேண்டும்?

"அநேக ஆயிரம் மூர்க்கர்கள் இருந்தாலும், அவர்களை விட்டு நன்றாகப் பரிசோதித்து காரியம் செய்யும் புத்திமானைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்" என இராமன் சொல்கின்றான்.

பழுதுஎண்ணும் மந்திரியின் பக்கத்துள் தெவ்வோர்
எழுபது கோடி உறும்

எழுபது கோடி பகைவர் செய்யும் தீமையை விட அருகில் இருந்து தவறான வழிகாட்டுபவர்களால் அதிகத் தீமை நேரும் என்று குறிப்பிடுகின்றார் திருவள்ளுவர்.

ஒரு நாட்டின் இராணுவத் தளவாடங்கள் உற்பத்தி ஆகும் இடம் இரகசியமாக வைக்கப்படும். எதிரிகள் எளிதில் தாக்காமல் இருக்கவே இந்த ஏற்பாடு. அதையே இராமன் பரதனுக்கு அறிவுறுத்தினான்.

உன் நாட்டில் யானைகள் உண்டாகுமிடம் பிறர் அறியாமல் மறைத்து வைத்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் பிறர் அவற்றை பிடித்துக் கொண்டு போவார்கள். ஆண் யானைகளைப் பிடிப்பதில் உபயோகப்படும் பெண் யானைகள் உற்பத்தி ஆகின்றனவா? குதிரைகளையும், ஆண் யானைகளையும் பெண் யானைகளால் மேன்மேலும் சம்பாதிக்கிறாயா? என வினவுகிறான்.

உறுப்புஅமைந்து ஊறுஅஞ்சா வெல்படை வேந்தன்
வெறுக்கையுள் எல்லாம் தலை.

மாட்சிமைக்குரிய உறுப்புகளுடன் அமைந்து துன்பமுறுதலுக்கு அஞ்சாது பகைவரை வெல்லும் படை அரச செல்வங்களுள் எல்லாம் தலையாய செல்வம் ஆகும்.

ஆட்சியையும் மக்களையும் காப்பாற்ற வேண்டிய பொறுப்பில் உள்ளோர் துன்பத்தை எதிர்கொண்டு வாழவேண்டிய பொறுப்பில் உள்ளார் என்கின்றார் திருவள்ளுவர்.

ஒரு நாட்டில் வரவு அதிகமானால் செலவு குறைவாக இருக்கின்றதா என்று இராமன் பொருளாதார நிலையிலும் கேள்வி எழுப்புகின்றார்.

ஆகாறு அளவிட்டிது ஆயினும் கேடுஇல்லை
போகாறு அகலாக் கடை.

என்றார் திருவள்ளுவர்.

பொருள் வரும் வாயில் சிறிதே ஆயினும், அப்பொருள் செல்லும் வாயில் அதிகமாகாத பொழுது கேடு வராது. வரவுக்குள் செலவு அடங்கி பொருள் மிஞ்சுதல் பொருள் போற்றும் நெறி.

ஆட்சிப் பொறுப்பை ஏற்க மறுத்து இராமன் பரதனுக்குக் கூறும் ஆலோசனைகள் போற்றுதலுக்கும், பின்பற்றுதலுக்கும் உரியவை. அதைத் தான் திருவள்ளுவர் அற்புதமாகக் கூறியுள்ளார்.

வாழ்வின் எல்லாத் தளங்களுக்கும் வழிகாட்டும் திருவள்ளுவர் இயற்கையின் ஒழுங்கமைப்பையும், இயற்கையைப் பேணுவதன் அவசியத்தையும் வலியுறுத்தி உள்ளார். இறைமையின் அடுத்த நிலையில் வான்சிறப்பை வலியுறுத்திய திருவள்ளுவர், "நீர் இன்றி அமையாது உலகு" என்றார். கடந்தகாலத் தலைமுறை நீர் மேலாண்மையில் சிறந்து விளங்கியது. கரிகாலன் கட்டிய கல்லணையைக் கண்டு வியந்து "மானுடத்தின் மிகப் பெரிய பொறியியல் சாதனை இது" என்று இந்தியாவின் புகழ்மிக்க கங்கைக் கால்வாய்த் திட்டத்தை உருவாக்கிய "பேயர்டு ஸ்மித்" எனும் ஆங்கியப் பொறியியலாளர் உரக்கக் கூவினார்.

சோழர்காலத்து நீர் நிலைகள் தூர்வாரும் அவசியமின்றி சிறப்பான தொழில்நுட்பத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

மழைக்காலத்தில் ஏரி நிரம்பும்போது நீந்துவதில் வல்லவரான ஒருவர் தண்ணீரில் பாய்ந்து முகத்துவாரத்தை அடைந்து குமிழித்தூம்பை மேலே தூக்குவார். அடியில் இரண்டு துளைகள் காணப்படும். மேலே இருக்கும் துளையில் நீர் வெளியேறும். "நீரோடித்துளை" என்று பெயர். கீழே இருக்கும் துளையில் நீர் சுழலும் போது "சேற்றுப் பகுதி" அதன் வழியே வெளியேறும். அதற்கு "சேறோடித் துளை" என்று பெயர். வெள்ளத்தில் அடித்துக் கொண்டு சேறோடித் துளை வழியே உபரித்தூர் வெளியேறுவதால் ஏரி தூர்வாரும் அவசியம் இன்றி விளங்குகின்றது.

நீரியல் தொழில் நுட்ப வல்லுநர்களாகத் தமிழர்கள் விளங்குகின்றார்கள். எவ்வளவு அரிய பொருத்தமான தொழில் நுட்பச் சொற்கள் நீர் சேமிக்கும் வடிவமைப்பைப் பொறுத்து அமைக்கப்பட்டு வருகின்றது.

பாசனத் நீர்த்தேக்கம் உடைப்பெடுக்காமல் உறுதியாகக் கட்டப்படும் அமைப்பு 'கலிங்கு',
நீர் ஓடும் வழி 'கால்வாய்,
பெருங்குட்டைக்கு 'குட்டம்',
சிறிய குட்டம் 'குட்டை',
குளிக்கும் சிறிய நீர்நிலை 'குண்டம்',
குளிப்பதற்கேற்ற சிறுகுளம் 'குண்டு',
குடைக்கிணறுக்குப் பெயர் 'குமிழி',
ஆர்ட்டீசியன் கிணற்றுக்குப் பெயர் 'குமிழி ஊற்று',

ஓர் ஒழுங்கில் அமையாத கிணறு 'கூவம்',
ஆழமற்ற கிணறு 'கூவல்',
பெருங்கிணறு 'கேணி',
தேக்கப்பட்ட பெரிய நீர் நிலை 'சிறை',
மலையில் இயற்கையாய் அமைந்த நீர்நிலை 'சுனை',
பாசிக்கொடி மண்டிய குளம் 'சேங்கை',
தொண்டை மண்டலத்தை ஒட்டிய பகுதியில் ஏரிக்குப் பெயர்'தாங்கல்',
கோயில் அருகே உள்ள நீராடும் குளம் "திருக்குளம்',
தெப்பம் சுற்றிவரும் குளம் 'தெப்பக்குளம்',
தாமரை முதலிய நீர்த்தாவரங்கள் மண்டிக் கிடக்கும் இயற்கை நீர்நிலை 'பொய்கை',
ஆற்றிடையே உள்ள அபாயமான பள்ளம் 'மடு'

என்று தமிழர்கள் நீர்மேலாண்மையில் தொலைநோக்குப் பார்வையில் சிறந்து விளங்கினார்கள்.

வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான்அமிழ்தம் என்றுஉணரற் பாற்று.

என்று திருவள்ளுவப் பெருமான் குறிப்பிடுகின்றார். இன்று திருக்குறள் பட்டித்தொட்டி முதல் பாராளுமன்றம் வரை ஒலித்துக் கொண்டிருக்கிறது.

இன்று இளைய தலைமுறையிடம் திருக்குறள் சிந்தனையை உலகத் திருக்குறள் பேரவை முன் எடுத்துச் செல்கின்றது. அதே நேரத்தில் இன்றைய கல்விமுறையின் தாக்கம் ஆங்கிலக் கல்வி மோகம். தகவல் தொழில்நுட்ப உலகத்தின் வேகத்தில் விண்ணில் பறக்கக் கற்றுக் கொண்ட இளைய தலைமுறை மண்ணில் கால்பதிக்கும் மனிதர்களாக வாழக் கற்றுக் கொள்ளவில்லையே என்ற கவலை நம்மை வாட்டுகின்றது.

நம்மை அதிர வைக்கும் அதிர்ச்சிச் செய்தி. 2011 ஆம் ஆண்டு புள்ளி விவரப்படி 2083 சிறுவர்கள் குற்றவாளிகளாக கைது செய்யப்பட்டுள்ளார்கள். அவர்களில் 1170 பேர் தொடக்க நிலைக் கல்வி மாணவர்கள், 617 பேர் தொடக்க நிலைக்கும் மேல்நிலைக் கல்விக்கும் இடைப்பட்ட மாணவர்கள், 56 பேர் மேல்நிலைக் கல்விக்கு மேல் படித்துக்

கொண்டிருப்பவர்கள், 240 பேர் கல்வியறிவு பெறாதவர்கள். இது எதைக் காட்டுகின்றது?

நம் கல்விமுறை அறநெறிச் சிந்தனைகளை (நீதி போதனைகளை) வலியுறுத்தத் தவறிவிட்டதா? என்பதைத் தான் காட்டுகிறது.

இன்றைய கவலை தரும் சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு திருக்குறள் அன்பர் திரு. ராசரெத்தினம் என்பவர் பொதுநல வழக்குத் தொடர்ந்துள்ளார். தன் வாதத்தின் உச்சத்தில் தெரிவிக்கிறார்.

"திருக்குறளை முழுமையாகப் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டால், அது தமிழைப் பரப்புவதோடு நமது மாநிலத்தின் கல்விமுறையை வேறொரு நிலைக்கு எடுத்துச் செல்லும். அறநெறிப் படிப்பினை இல்லாத பாடத்திட்டம் சமூகத்தை எழுத்தறிவு மிக்க சமூகமாக ஆக்கும். கல்வியில் சிறந்த சமூகமாக ஆக்க முடியாது. கல்வி என்பது உண்மையில் வலிமையான நல்லொழுக்க நெறி தான். அந்தக் கல்வி தான் ஒருவனுள் நன்மையும் தீமையும் பிரித்துப் பார்க்கும் திறனை வளர்க்கும். அது இல்லாத கல்வி பயனில்லாக் கல்வி. நல்லொழுக்க நெறியை மாணவர்கள்பால் வளர்க்கத் திருக்குறளை முழுமையாகப் பாடத்திட்டத்தில் சேர்க்க வேண்டும்" என வலியுறுத்தி வழக்கினைத் தாக்கல் செய்தார்.

போற்றுதலுக்குரிய மாண்புமிகு நீதியரசர் மகாதேவன் அவர்கள் திருக்குறளின் அறத்துப்பால், பொருட்பால் ஆகிய இருபாலின் 1080 குறட்பாக்களையும் தமிழக அரசு பாடத்திட்டத்தில் சேர்க்க வலியுறுத்தி வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பினை வழங்கியுள்ளார்.

"The future of every country lies at the hands of younger generation. It is the duty of the state to show them the rightful path and there is no other better philosophy than what is preached in Thirukkural"

"ஒவ்வொரு நாட்டின் எதிர்காலமும் அதன் இளைய தலைமுறையின் கையில் இருக்கிறது. அவர்களுக்குச் சரியான பாதையைக் காட்ட வேண்டியது அரசின் கடமை.

திருக்குறளுக்கு மேலான தத்துவம் வேறு எதுவும் இல்லை" என்று கூறியுள்ளார்.

காலத்தின் தேவை அறிந்து இளைய தலைமுறையின் எதிர்கால நலன் கருதி மாண்புமிகு நீதியரசர் மகாதேவன் அவர்கள் வழங்கிய தீர்ப்பினை வரவேற்கின்றோம். நன்றி கூறுகின்றோம்.

இளம் மாணவப்பருவம் தான் நற்சிந்தனைகளை ஆழமாக உள்வாங்கிக் கொள்கின்ற பருவம். நல்ல நிலத்தில் நல்ல விதையை நட்டால் நல்ல விளைச்சல் கிடைக்கும். "பொய் பேசாதே" என்று வளர்க்கப்படும் குழந்தை வாழ்நாளில் எப்படி பொய் பேசும்? "பிறர் பொருளுக்கு ஆசைப் படக்கூடாது" என்று வளர்க்கப்படும் குழந்தை எப்படி பொருளாதாரக் குற்றங்கள் புரியும்? "கள் உண்ணாதே" என்று வளர்க்கப்படும் குழந்தை, இளைஞர் ஆனபிறகு எப்படி மதுக்குடித்து மயங்கி தெரு வீதியில் கிடக்கும்?

நாளும் நாளும் திருக்குறள் சிந்தனையை உள்வாங்கிக் கொள்ளும் இளைய தலைமுறை வளர, வளர, திருக்குறள் சிந்தனைகளை அசை போட்டு, அசை போட்டு ஒழுக்கமும், நேர்மையும், மனிதமும் உள்ள மனிதர்களாக வளர்வர்! வாழ்வர். சட்டத்திற்கு அஞ்சி குற்றங்கள் புரியாமல் வாழ்வதை விட, அறநெறியின் வழியில் குற்றமற்ற மனிதனாக வாழும், வளரும் புதிய தலைமுறை உருவாகும்.

இன்றைய இளைய தலைமுறையின் ஒழுக்க நலன் கருதி தமிழக அரசின் கல்வித்துறை, நீதியரசர் மகாதேவன் அவர்களின் தீர்ப்பினை நடைமுறைப் படுத்த வேண்டியது தற்பொழுதைய அவசர, அவசியத் தேவையாகும். மக்கள் மன்றங்களும், திருக்குறள் அமைப்புகளும், திருக்குறள் அறிஞர்களும், ஆர்வலர்களும், பெற்றோர்களும் திருக்குறளை இளைய தலைமுறையிடம் வலிமையாக எடுத்துச் செல்வது அவசர, அவசியத் தேவையாகும்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு,

பிரிண்டிங் சரியில்லை

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

திருவாசகத் தேன்

(தவத்திரு குன்றக்குடி அடிகளார்)

புண் சுமந்த பொன்மேனி!

விளையாட்டு, விளையாட்டாக மட்டும் இருத்தலின் பயன் இல்லை. விளையாட்டின் போக்கிலேயே அறிவுக்கு அரிய கருத்துகளைக் கற்றுத்தர வேண்டும். அம்மானை என்பதும் பெண்கள் விளையாடும் ஒருவகை விளையாட்டு! அம்மானை விளையாடும் பெண்கள் பாடுவதாக அமைந்த பாடல்கள் உள்ள பகுதி திருவம்மானை என்று அழைக்கப் பெற்றது. திருவம்மானையில் இருபது பாடல்கள் உள்ளன. இந்த இருபது பாடல்களும் தத்துவச் செறிவுடைய பாடல்கள்! எளிய மொழி நடையில் அமைந்தவையும் கூட! இதுபோலவே பூவல்லி, பொற்சுண்ணம் என்பவையும் அமைந்துள்ளமையை அறிக.

அம்மானைப் பாடல்கள் வரிப்பாட்டு வடிவத்தில் அமைவன. திருவெம்பாவையைப் போலவே, இந்த விளையாட்டும் கன்னிப் பெண்களால் நல்ல கணவனை நாடிப் பிரார்த்தனையுடன் விளையாடப் பெறுகிறது. இந்த அம்மானை விளையாட்டு, தமிழகத்தில் தொன்மைக் காலத்திலேயே விளையாடப்பெற்ற விளையாட்டு. திருவம்மானை பற்றிய விளையாட்டுக் குறிப்புகள் கலித்தொகையிலும் சிலப்பதிகாரத்திலும் காணப்படுகின்றன. அதுபோலவே திருமுறைகளிலும் திருவம்மானை விளையாட்டு பற்றிய குறிப்புகள் காணக்கிடக்கின்றன.

சிவன், திருப்பெருந்துறையில் எழுந்தருளியுள்ளவன். எல்லா உயிர்களையும் கணக்கின்றி எல்லை கடந்து ஆட்கொண்டருளும் தண்ணளியுடையவன்; பெரியோன்; தனக்குவமை இல்லாதவன்.

திருப்பெருந்துறை சிவனுக்கு விண்ணுலகத்திலும் மண்ணுலகத்திலும் புகழ் உண்டு. புகழப்படுவது புகழ். இறைவன் புகழ்ச்சியைக் கடந்தவன். புகழ்ச்சியைக் கடந்த போகம் என்று போற்றுவார் மாணிக்கவாசகர்.

இந்த உலகத்தில் வாழும் மக்கள் புகழுக்கு ஆசைப்படுபவர்கள். பதவிகளுக்கும் பெருமைகளுக்கும் ஆசைப்படுபவர்கள்! ஆனால் புகழ் என்ற சொல் காலத்தினால் பொருளற்றதாக - விளம்பரமாக மாறி

வருகிறது. மனிதர்களிடையில் மட்டும் தானா? தேவர்களிடத்திலும் கூட இந்தப் பதவி, புகழ் ஆசை உண்டு. தேவர்களின் பதவி ஆசைதானே தக்கன் வேள்வி! வேள்வியில் சொரியப்பெறும் அவி, சிவபெருமானுக்கே உரியது. ஆனால் மற்றைத் தேவர்களும் அவிப்பொருளுக்கு ஆசைப்பட்டனர். தக்கனைக் கொண்டு வேள்வி இயற்றினர் தேவர்கள். உயர் பீடத்தில் அமர்ந்தனர்; அவிப் பொருளைப் பெற்றனர்; இல்லை, இல்லை! மாணிக்கவாசகர் வாக்குப்படி "தின்றனர்". தகுதியில்லாத ஒன்றினைப் பெருமை கருதியும் சுவை கருதியும் உண்டனர் என்பது "தின்றனர்" என்று இழிவாகப் பேசப்படுகிறது. அவிப்பொருளைத் தின்ற தேவர்கள், கடலில் எழுந்த அமுதையும் உண்டனர். நஞ்சு கடலில் எழுந்தபோது தேவர்கள் என்ன செய்தார்கள்! ஆபத்தில் காப்பதன்றோ தலைமையின் இலக்கணம். ஆபத்தில் காக்கும் தலைமையே புகழுக்குரியது. நஞ்சைக் கண்ட தேவர்கள் தலைதெறிக்க ஓடினர். சிவபெருமானை நோக்கிக் காப்பாற்றும்படி அழுதனர்; அரற்றினர். சிவபெருமானும் நஞ்சினை உண்டு அமரர்களுக்கு அருள் செய்தனன். இதுவே புகழுதற்குரிய சாதனை.

"விண்ணோர்கள் அமுதுண்டும் சாவ ஒருவரும்
உண்ணாத நஞ்சுண்டு இருந்தருள் செய்த"தால்

சிவன் புகழ் விண்ணையும் மண்ணையும் தழீஇய புகழாயிற்று. நீலகண்டம் பெற்றமையின் எவ்வுயிர்க்கும் தலைவன் ஆனான்; ஈசன் ஆனான்.

இறைவனுக்கு - சிவபெருமானுக்கு மூன்று கண்கள். அவை முறையே ஞாயிறு, திங்கள், தீ. இந்த மூன்று கண்களில் தீ ஒரோவழி கட்புலனுக்கு வருவது. ஆயினும் பயன்பாடு மிகுதியுடையது. தீ, நெற்றிக் கண் அறிவுக்கண்; தீ, தூய்மையற்றனவற்றையெல்லாம் அழிக்கும். ஆனால் தீ ஒரு பொழுதும் அழுக்காவது இல்லை. அறிவு அறியாமையை அகற்றும்.

சிவம் - சக்தி பொருளும் ஆற்றலும் போல, நெருப்பும் சூடும் போலப் பிரிக்க ஒண்ணாதது. உலகுயிர்களுக்கு உள்ளே வேட்கை, துய்த்தாலொழிய நீங்காது. வேட்கை நீங்கினாலே விடுதலை. துய்த்தலுக்குரிய விருப்ப உணர்வைத் தருபவள் அன்னை பராசக்திதான். அதனாலேயே அன்னை பராசக்தி தன் கையில் கரும்பை ஏந்தியிருக்கிறாள். அன்னை பராசக்திக்குக் காமாட்சி என்ற திருநாமமும்

வந்தது. இறைவன் சிவன் - உலகுயிர்கள் எல்லாம் போகம் துய்த்து அவ்வழி நிறைநலம் எய்துதல் வேண்டும் என்ற திருவுள்ளக் குறிப்பினாலேயே அம்மையப்பனாக - போகத் திருமேனியுடையவனாக இருக்கின்றான். இப்புவியில் வாழும் மாந்தரும் விலங்கு முதலிய சிற்றுயிர்களும் ஆண் - பெண் என்று காதலில் கூடி இன்புற்று வாழ்கின்றனர். இவ்வின்ப வாழ்க்கைக்குத் தூண்டுவதே சிவபெருமானின் திருவுள்ளம்! அன்னையாகிய சிவையின்பால் நோக்குதலே மணம்!

உயிர்க்குலம் பரிணாம வளர்ச்சியில் வளரவும் பலருக்குப் பயன்படவும் உய்தி பெறவும் காதலிருவர் கூடி வாழ்தல் திருமணம் என்று கூறப்பெறுகிறது. ஆதலால் சைவத் தமிழ் மரபில் இறைவனை அம்மையப்பனாக வழிபடும் மரபு தோன்றி வளரலாயிற்று. "பெண் சுமந்த பாகத்தன்" என்றதால் சிவன் தனக்காகப் பெண்ணைச் சுமக்கவில்லை. உயிர் குலத்தின் நன்மை கருதியே சுமத்தலால் "சுமந்த" என்றருளியுள்ள நயமும் உணர்க.

எனவே, தமிழ் மக்கள் சிவனை மங்கை பங்கினனாகவே வழிபட்டு வந்துள்ளனர். தமிழகத்தின் தொன்மை வாய்ந்த வழிபாட்டுத் திருமேனி மங்கை பங்கினன் என்பதற்கு நிறையச் சான்றுகள் உள்ளன. மாணிக்கவாசகர்,

தோலும் துகிலும் குழையும் சுருள்தோடும்
பால் வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையும் உடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் - கோத்தும்பீ

என்று பாடுகின்றார். அம்மையப்பர் திருக்கோலம் தொன்மைக் கோலம் என்று பாடுகின்றார். பழைமை வாய்ந்த சாத்திர நூலாகிய திருக்களிற்றுப்படியார்,

"அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர்"

என்று போற்றுகிறது. சங்க இலக்கியங்களில் ஒன்றாகிய ஐங்குறு நூற்றுக் கடவுள் வாழ்த்து.

நீல மேனி வாலிழை பாகத்து
ஒருவன் இருதாள் நிழற்கீழ்
மூவகை உலகும் முகிழ்த்தன முறையே!

என்று போற்றுகிறது திருமுறைகள் முழுதும் "பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்த கோலமே" போற்றிப் புகழ்ந்து பேசப்படுகிறது.

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

என்ற திருக்குறளில் ஆதி என்பது சக்தியைக் குறிக்கும் சொல். சக்தியைப் பாகத்தில் உடையது பரம்பொருள் என்று இதற்கு ஒரு சைவ மரபு உரை உண்டு. சிவபெருமானை அம்மையப்பனாகவே சிந்தனை செய்தல் வேண்டும். வழிபடுதல் வேண்டும் என்ற மரபு வழி வழி பின்பற்றப்படுகிறது. சிவபெருமானும் அருளிச் செயல் நிகழும் போதெல்லாம் பெண் சுமந்த பாகத்தனாக எழுந்தருளி அருள்பாலித்துள்ளான். "பெண் சுமந்த பாகத்தன்" என்று போற்றுவது உலகியல்; தமிழ் மரபு.

தமிழகத்தில் பழங்காலத்திலிருந்தே நாட்டின் பொதுநலப் பணிகளை அரசன் ஏவும் வழியில் வீட்டுக்கொருவர் வீதம் பொறுப்பேற்றுச் செய்து நிறைவேற்றுவது பழக்கம். மாணிக்கவாசகருக்கு அரசு இழைத்த துன்பங்கள் கண்டு பொறுக்காமையல் வையையாறு சினம் கொண்டு பெருவெள்ளமாகப் பாய்ந்தோடி வந்தது. மதுரை மாநகரில் வையை யாற்றங்கரையில் உடைப்புக்கள். இந்த உடைப்புகளை அடைக்க வீட்டுக்கு ஓர் ஆள் வரும்படி பாண்டியனின் ஆணை பிறந்தது. மதுரையில் பிட்டு விற்றுப் பிழைத்து வந்த வந்திக் கிழவிக்குக் கணவனும் இல்லை; மகனும் இல்லை. என்ன செய்வாள்? ஏழைப் பிட்டு வாணிச்சியின் இதய உணர்வுகளை ஆலவாயண்ணல் அறிந்து கொண்டு அவனே தட்டும் மண் வெட்டியும் தாங்கிக் கொற்றாளாக வந்தான். நாணயமான தொழிலாளியாகவும் நடந்து கொண்டான். கூடுதல் கூலி கேட்கவில்லை. உண்பதற்குப் பிட்டு வாங்கித் தின்றுவிட்டு வேலை செய்யப் போனான். பசிக்கு உணவு; உடலுக்கு வேலை. இது தத்துவம்; கொள்கை; கோட்பாடு.

சிவன், பெண் சுமந்த பாகத்தன். அதனால் அருளுதல் இயல்பாக உடையவன். ஏழைப் பிட்டு வாணிச்சியின் துயர் நீக்க உதிர்ந்த பிட்டையே கூலியாகக் கொண்டு மதுரை வையையாற்று உடைப்பை அடைக்க மண் சுமந்தான். மன்னனின் கோலால் மொத்துண்டான்; திருமேனியில் வடுத்தாங்கினான்; புண்பட்டான்.

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகப் பண் சுமந்த பாடல்களைப் பெற்றுள்ள பெருமை தமிழுக்கு உண்டு. இனிமை பயக்கும் இசையையே

தமிழிலக்கியங்கள் பண் என்று பாராட்டுகின்றன. தமிழ் மக்கள் பண்களைக் கண்டதோடன்றி அப்பண்களைப் பாடும் பருவ காலங்களையும் வரையறுத்திருந்தனர். பரிபாடல், சிலப்பதிகாரம் முதலியன மூலம் சங்க காலத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட பண்கள் இருந்தனவாகத் தெரிகிறது. ஆனால் பெரும் பண் நான்கு என்பது மரபு வழி வந்த கருத்து. அவை, பாலை, குறிஞ்சி, மருதம், செவ்வழி (நெய்தல்) என்பன. தேவாரத் திருமுறைகள் பண்ணமைவு முறையில் அமைந்தவை. தேவாரத் திருமுறைகளில் இருபத்து மூன்று பண்கள் மட்டுமே அமைத்துள்ளன. திருவாசகம் இயற்றமிழ் போல யாப்பமைவில் தோன்றினாலும் திருவாசகத் திருவம்மானையைச் சீகாமரத்தில் பாடலாம். சீகாமரப்பண் காலைப் பொழுதில் பாடவேண்டிய பண். அதனாலேயே மாணிக்கவாசகர் "பண் சுமந்த பாடல்" என்று பாடுகின்றார்.

சிவன் தமிழோடு இசைப் பாடல்கள் கேட்பதில் இச்சை மிகுதியும் உடையவன். நாள்தோறும் காசுகள் தந்து தமிழோடிசை கேட்டின்புறும் இயல்பினன். மாணிக்கவாசகரின் திருவாசகப் பாடல்கள் பண் சுமந்த பாடல்கள். மாணிக்கவாசகரை இழந்துவிட்டால் பண்சுமந்த பாடற் பரிசு கிடைக்காது.

மாணிக்கவாசகரின் பண் சுமந்த பாடல்களைப் பரிசாகப் பெறுவதற்காகச் சிவபெருமான் வான்பழித்து இம்மண் புகுந்தனன். புவனியில் சேவடி தீண்டினன். குதிரைச் சேவகன் ஆயினன். மண் சுமக்கும் கூலிக்காரனாகி மண் சுமந்தான்; அடிபட்டான். புண் சுமந்தான். எண்ணரிய திருவிளையாடல்களை நிகழ்த்தினான். எல்லாம் மாணிக்கவாசகரைக் காப்பதற்கேயாம். மாணிக்கவாசகரிடம் பரிசாகப் பெற்ற பண் சுமந்த பாடல்களைத் தாமே தம் கைகளினால் படியெடுத்துக் கொண்டான். கடையூழியிலும் திருவாசகத்தை நினைத்து தன் தனிமையைக் கழிப்பதற்காக, இக்கருத்தையெல்லாம் உணர்த்தும் பாடல் இது.

பண் சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண் சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண் சுமந்த கீர்த்தி வியமண்ட லத்தீசன்
கண் சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண் சுமந்து கூலி கொண்டு அக்கோவால் மொத்துண்டு
புண் சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்

(திருவம்மானை-8)

(தொடரும்)

குன்றக்குடி
அருள்தரு சண்முகநாதப் பெருமான்
விசாக விழா

குன்றக்குடியில் கண்கண்ட தெய்வமாய், கலியுக வரதனாய் எழுந்தளியிருக்கும் அருள்தரு சண்முகநாதப் பெருமான் விசாகத் திருவிழா 21.5.2016 இல் சிறப்பாக நடைபெற்றது.

அன்று காலை 7-15 மணியளவில் அருள்தரு சண்முகநாதப்பெருமான் வெட்டிவேர்த் திருக்கோலத்துடன் குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனத் திருமடத்திற்கு வெண்கொற்றக் குடை நிழற்ற, மேளதாளங்கள், வேதமுழக்கம், திருமுறை திருப்புகழ்ப் பண்ணிசை முழக்கங்களுடனும், அதிர்வேட்டுகளுடனும் எழுந்தருளினார். கீழரதவீதி - தெற்குரதவீதிச் சந்திப்பிற்கு வந்த நிலையில் திருமடத்திலிருநது அலங்கரிக்கப்பட்ட யானை முன் செல்ல மங்கல மங்கையர், சான்றோர்கள் அறிஞர்கள் சீர்வரிசை எடுத்துக்கொண்டு வரவேற்க அருள்தரு காளத்தியப்பர் சந்நிதிக்குப் பெருமான் எழுந்தருளினார். அதன்பின் வசந்த மண்டபத்திற்கு எழுந்தருளினார். வசந்த மண்டபத்தில் வேதமுழக்கத்துடன் ஒரு சுற்றும், திருமுறை, திருப்புகழ்ப் பண்ணிசையுடன் ஒரு சுற்றும் நாதசுர மேளவாத்திய இசையுடன் ஒரு சுற்றும் பெருமான் வலம் வந்து வசந்த மண்டபத்தின் கொலுபீடத்தில் எழுந்தருளினார்.

பின்னர் கவிஞர் அறுவர் தனித்தனியே தீந்தமிழ்க் கவிதை வரவேற்புப் பாமாலை பாடினர்.

முற்பகல் 11.30 மணி அளவில் பெருமானுக்குச் சிறப்புத் திருமுழுக்காட்டல் நடைபெற்று, பச்சை சாத்துப்படி செய்யப்பெற்று சிறப்புப்பூசனை நிகழ்ந்தது. இத்திருக்காட்சியை இருநூற்றுக்கு மேற்பட்ட அன்பர்கள் தரிசனம் செய்து மகிழ்ந்தனர்.

மாலை 5 மணி முதுல் 7 மணி வரை திரு. S.G.N. கணேசன் குழுவினர், திரு.சோம. முருகேசன் குழுவினர் நாதசுர இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

அதன்பின், நூல் வெளியீட்டுவிழா, பாராட்டு விழா நிகழ்ச்சிகள் தொடங்கின. ஆதீன ஓதுவார் திரு.அரு. மாசிலாமணி ஓதுவார் இறைவாழ்த்துப் பாடினார். திருவருள்திரு குருமகாசந்நிதானம் அவர்கள் இவ்விரு நிகழ்ச்சிகளுக்கும் தலைமை வகித்துச் சிறப்பித்தருளினார்கள். குன்றக்குடி சண்முகநாதன் பேரில் சிலேடைப்புலி பிச்சுவையர் இயற்றிய குன்றக்குடி அருள்தரு சண்முகநாதர் உலாவுக்கு, ஆதீனப்புலவர், "தமிழாகரர்" திரு.க. கதிரேசன் எழுதிய உரைநூல் வெளியிடப்பெற்றது. முனைவர்.மு.பழனியப்பன் உரைத்திறனாய்வுரை நிகழ்த்தினார். பின்னர் கோவை விஜயா பதிப்பகம் திரு.மு. வேலாயுதம் அவர்களுக்கு திருவருள்திரு குருமகாசந்நிதானம் அவர்கள் "பதிப்புக் கலைமாமணி" என்னும் பட்டம் தந்து பாராட்டுப் பட்டயமும் கேடயமும் வழங்கிப் பாராட்டிச் சிறப்பித்தருளினார்கள். திரு.மு. வேலாயுதம் ஏற்புரையாற்றினார். முனைவர்.சொ. சேதுபதி நிகழ்ச்சித் தொகுப்புரை வழங்கினார். நன்றியுரைக்குப்பின் விழா இனிதே நிறைவெய்தியது.

இரவு 10 மணியளவில் அருள்தரு சண்முகநாதப் பெருமான் நாதசுர இசைமுழக்கத்துடன் வெள்ளிரதத்தில் எழுந்தருளித் திருவீதி உலாவந்து அன்பர்களுக்கு அருள்வழங்கித் திருக்கோயிலில் சேர்க்கையானார்.

பிரதமர் நரேந்திர மோடியின் அதிகாரபூர்வ இணைய தளமான w.w.w.pmindia.gov.in இப்போது தமிழ் உள்ளிட்ட 6 பிராந்திய மொழிகளில் காணலாம்.

இதுவரை ஆங்கிலம் மற்றும் இந்தி ஆகிய மொழிகளில் மட்டும் இயங்கி வந்த இந்த இணைய தளம் தற்போது தமிழ், வங்காளம், குஜராத்தி, மலையாளம், மராத்தி மற்றும் தெலுங்கு ஆகிய மொழிகளில் கூடுதலாக கிடைக்கிறது. இந்த இணைய தளத்தை மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் தொடங்கிவைத்தார்.

நிறங்கள் ஓர் ஐந்துடையாய்
என்ற சிவபுராணத் தொடர்

(தருமையாதீனப் புலவர்.வித்துவான். தா. குருசாமி தேசிகர்)

*"நிறங்கள் ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான்"*

என்ற திருவாசகத் தொடர்க்குத் தருமையாதீன உரை கீழ்க்கண்டவாறு விளக்கம் தருகிறது.

*- "ஐந்தும் என்னும் முற்றும்மை தொகுத்தலாயிற்று
நினைவார் நினைவின் வண்ணம் எந்நிறத்துடனும்
தோன்றுவாய் என்றபடி. இனிச் சிவபிரானது
திருமுகங்கள் ஐந்துனுள்ளும் ஒரோவொன்று
ஒரோவொரு நிறம் உடையதாதலும் அறிந்து
கொள்க. இங்கு மறைந்திருந்தாகிய எம்பெரு
மானே' என உரைக்க. அடியார்க்கு வெளி
நிற்கும் நீ, தேவர்க்கு மறைந்து நிற்கின்றாய்"*

என்று குருவருள் விளக்க உரை விளக்கம் தரும்.

நிறங்கள் கவர்ச்சி தருவன; மழலைப் பருவத்துக்கு முன்பே மனித மனத்தில் நிறங்கள் இடம்பெறுகின்றன.

நிறங்கள் பற்றிய ஆய்வு :

நிறம் - வண்ணம் - அழகு என்ற பொருளைத் தருவது. வெள்ளை, சிவப்பு, பச்சை, மஞ்சள், கறுப்பு என்று சூடாமணி நிகண்டு நிறங்களை வரிசைப்படுத்தும்.

வெள்ளை- தூய்மை, தெய்விகம், அமைதி, அருள் என்ற பண்பையும், பச்சை- நிலைபேறு, புதுமை, வளம், வாழ்வு என்ற பொருளையும், மஞ்சள்- மங்கலம், பசப்பு என்ற பொருளையும், கறுப்பு - துக்கம், சாவு, நரகம், அறியாமை என்ற பொருளையும் விளக்குவனவாகக் கூறப்படுகின்றன.

பண்புக் குறியீடுகள் :

i. கலைமகளை "வெள்ளைக் கலையுடுத்து" என்ற பாடலைக் கொண்டு வெண்மைப் பண்பைக் குறிப்பிடுவர்.

ii. "கறுப்பும் சிவப்பும் வெகுளிப்பொருள்" என்பது தொல்காப்பியம் கூறும் பண்பு.

"கறுத்து இன்னா செய்தல்" என்ற குறளில் "கறுத்தல்" சினத்தலைக் குறிக்கிறது.

iii. "நிறத்துரு உணர்த்தற்கும் உரிய என்ப" என்ற அடுத்த தொல்காபபியச் சூத்திரம், நிறங்கள் பண்புகளின் உருவங்கைகளை உணர்த்தி வரும் என்று தெளிவுபடுத்தும்.

iv. "பஞ்சமரபு" என்ற இசைநூல் பண்களுக்கு நிறங்கள் இவையென வகுத்துக் கூறுகிறது.

V. நால்வகைப் பாக்களில் வெண்பாவிற்கு வெள்ளைநிறமும் அகவற்குச் செந்நிறமும், கலிப்பாவிற்குப் பொன்னிறமும், வஞ்சிப்பாவிற்கு நீலநிறமும் பன்னிருபாட்டியலில் கூறப்பட்டுள்ளன.

Vi. யோகப் பயிற்சி செய்வார், அவ்வவர் வளர்ச்சி நிலைக்கேற்ற பல்வேறு நிற ஒளிக்காட்சிகளைப் பெறுவர் - என்பது தமிழ்ப் பெரியார் திருவிக சிந்தனை.

சூடாமணி நிகண்டில் :

அருகன் - செய்யோன் என்றும், சிவன்-நீலகண்டன், செம்மேனி - எம்மான், என்றும், முருகன்-செவ்வேள் என்றும், திருமகள் - செய்யாள், என்றும், துர்க்கை- நீலி என்றும் வயிரவன்- காரி என்றும், பரிதி - செஞ்சுடர் என்றும், வியாழன் - பொன்னிறம் என்றும், சனி- நீலன் காரி என்றும், செவ்வாய் - செந்தீவண்ணன் என்றும், புதன்- பச்சை என்றும், உமை - நீலி என்றும் பண்பு - நிறம் அடைவாகக் கட்டமைத்து விளக்கப்படுகின்றன.

சிவபுராணத் தொடர் ஆய்வு :

சிவபெருமான் ஐந்தொழில் செய்வதாக மரபு. படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என்ற ஐந்து தொழில்களும் "நிறங்கள்" ஓர் ஐந்துடையாய்? என்பதனை விளக்கும்.

சில நிறங்களின் தொழிற்பாடே தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ளன. "வானவில்" ஏழு நிறங்கள் உடையன என்பது இவ்வைந்துள் ஏழும் அடங்குவன எனலாம். ஐந்தொழில் எவ்வாறு படைத்தல், காத்தல், அழித்தலில் அடங்குகிறதோ அதுபோல, "நிறங்கள்" ஓர் ஐந்துடையாய் என்பது கீழ்க்கண்டவாறு பொருத்திக் காட்டலாம்.

படைத்தல் – பச்சை; காத்தல் – வெள்ளை,
அழித்தல் – கறுப்பு; அருளல் – மஞ்சள்
மறைத்தல் – சிவப்பு (செம்மை – சிவகதி இதுவே
சிவபெருமானின் ஐந்துமுகங்களுக்கும் உரிய நிறங்களும் ஆகும் என்று முடிவு செய்யலாம்.

மக்கள் வழக்கில் :

மஞ்சளில் பிள்ளையார் உண்டாக்குதலும், திருமணப் பத்திரிகைகளில் மஞ்சள் குறியிடுதலும், போக்குவரத்தில் நிறுத்தத்திற்குச் சிவப்பும், புறப்படுவதற்குப் பச்சையும், அமங்கலத்திற்குக் "கறுப்புக் குறியிடுதலும்" அரசியல் கொடிகளில் உள்ள நிறங்கள். அவ்வவற்றின் பண்பினைக் குறிப்பன என்று தலைவர்கள் பொருள் கூறுதலும் ஆகிய செயல்கள் தொடர் சிந்தனையில், இறை சிந்தனையின் "பரிணாமத் தோற்றமே" என்று முடிவு கூறலாம்! சிவனெனும் நாமந்தனக்கே உடைய செம்மேனி எம்மான் நிறங்கள் ஐந்தும் உடையனாகி நிற்பதையே பஞ்சவர்ணம் என்கிறோம். மேலும் அன்பர்கள் ஆய்க.

அரசியல் வாழ்க்கையிலும் சமூக வாழ்க்கையிலும் ஒருவன் சுதந்திரம் பெறலாம். ஆனாலும் ஆசைகளுக்கும் சினத்திற்கும் அவன் அடிமையாக இருந்தால், உண்மையான சுதந்திரத்தின் தூய இன்பத்தை உணரமுடியாது.

– சுவாமி விவேகானந்தர்



எத்தனை ஆண்டுகள் இருப்போம்?

(முனைவர்.புலவர். ம. இளங்கீரன்)

1. உயர்ந்த கொள்கைகள் ஊட்டிட காந்திநீ
ஒருமுறை பிறப்பெடுத்தாய் - இனி
ஒருமுறை பிறப்பெடுப்பாய்!
அயர்ந்த நேரத்தில் எல்லையைத் தாண்டும்
ஆசையைப் போக்கடிப்பாய் - மண்
ஆசையைப் போக்கடிப்பாய்!
பயன்படும் வாழ்க்கை பாழாக இளைஞர்
படம்பார்த் தலைகின்றார் - திரைப்
படம்பார்த் தலைகின்றார்!
முயற்சி ஊக்கம் தொழில்முன் னேற்றம்
முதலவை மறந்துவிட்டார் - கல்வி
முதலதை மறந்துவிட்டார்!

2. கோடிக் கணக்கில் ஊழல்கள் பண்ணிக்
கொள்ளை அடிக்கின்றார் - கொடும்
கொள்ளை அடிக்கின்றார்!
ஆடிக் காற்றதில் ஆடும் கிளையென
அஞ்சி நடுங்குகின்றார் - உடல்
அஞ்சி நடுங்குகின்றார்!
பேடித் தனமாய்ப் பிழைகளைப் பார்த்தும்
பேசா திருக்கின்றார் - மனம்
கூசா திருக்கன்றார்!
ஓடி உழைப்பவர் உயரவே முடியாது
உருகி மெலிகின்றார் - பலர்
கருகி நலிகின்றார்!

3. *இன்னும் எத்தனை ஆண்டுகள் இருப்போம்*
என்றதை நினைப்பதில்லை - நாள்
சென்றதை நினைப்பதில்லை!
பின்னொரு ஆடவன் பெண்ணா சைமனம்
பிழையெனக் கருதவில்லை - பெரும்
பிழையெனக் கருதவில்லை!
பொன்பொருள் போதும் புவியெலாம் வாழவே
புத்தியைப் புகட்டவில்லை - நற்
புத்தியைப் புகட்டவில்லை!
வன்நெஞ் சராகி வம்பு வழக்கினில்
வருவாய்க்(கு) அலைகின்றார் - தரகு
வருவாய்க்(கு) அலைகின்றார்!

— — — —



ஜனநாயக நாட்டில் - ஆளுகின்ற தன்மை திட்டங்களை நிறைவேற்றுகின்ற செயல்திறன் அதன் அளவு பெறுகின்ற பயன்... அதனால் சமுதாயத்தில் ஏற்பட்டிருக்கின்ற உயர்வு, தாழ்வு ஆகியவற்றைச் சரியாக மதிப்பிட்டு அறிவாளிகள் பேசாமல் இருந்துவிடுவார்களானால் நிச்சயமாக ஜனநாயகம் பாழ்பட்டுப் போய்விடும்.

மக்களாட்சியில் ஆட்சிப்பொறுப்பு யார் கையில் இருக்கிறதோ அவர்களுடைய குணத்தையே மக்களாட்சி பெறுகிறது. நல்லவர்கள், நாணயமானவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றால், மக்களாட்சி நல்லதாகும். இல்லையேல் விபரீதங்கள் விளையும்.

- அண்ணா

கற்றாலும், கேட்டாலும், எண்ணினாலும் கூட ஒரு மனிதன் முழுமையான அறிவைப் பெற்றுவிடுவதில்லை. ஏன் அகநிலை முயற்சிகளால் அவன் அறிவின் தாழ்வாரத்திற்கே வந்து சேர்கிறான். அவன் அறிவுடையவனாகிவிடுவதில்லை.

- அருள்நெறித்தந்தை

"செந்தமிழ் திலகம்" தேவகி முத்தையா M.A.,M.Phil.,Ph.d., காரைக்குடி தமிழ் இசைச் சங்கத்தின் பொன்விழா ஆண்டு தொடக்க விழா நிகழ்ச்சியில் ஆற்றிய ஏற்புரை

காரைக்குடி தமிழ் இசைச் சங்கம் பொன்விழாக் காணும் இவ்வேளையில் எங்களைப் பாராட்டிக் கௌரவித்தமைக்குச் சங்கத்தின் உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். பத்து நாட்களுக்கு முன்பு தான் கம்பன் மணிமண்டபத்தில், கம்பர் விழாவில் நான் முனைவர் பட்டம் பெற்றமைக்குப் பாராட்டி கௌரவித்தார்கள். அந்த அமைப்பில் சகோதரர் P.R.C. அவர்களும் ஒரு உறுப்பினர். ஏற்புரையின் போது என் ஆய்வுரைபற்றிக் கூற விரும்புகிறேன். நேரம் போதாமையால் வேறு ஒரு சந்தர்ப்பத்தில் பேசுகிறேன் என்றேன். சகோதரர் P.R.C. உடனே என்னிடம் வந்து தமிழ் இசைச் சங்கப் பொன்விழா அரங்கில் காரைக்கால் அம்மையார் பற்றி எத்தனை நேரம் வேண்டுமானாலும் பேசலாம் என்றார்கள். கவிப்பேரரசு வைரமுத்து போல் எல்லாம் என்னால் மணிக் கணக்கில் பேச இயலாது. ஆய்வு பற்றி ஒரு 20 நிமிடமாவது பேசுகிறேன் என்று கூறியதன் தொடர்ச்சி தான் இந்த சிறப்புரை என்று கூறலாம். இன்று தலைமை ஏற்றிருக்கும் திருவண்ணாமலை குன்றக்குடி ஆதீனம் திருவருள்திரு. பொன்னம்பல அடிகளார் அவர்கள், எனக்கு பாராட்டுரை நல்கியிருக்கின்றார்கள். பல ஆண்டுகளுக்கு முன்பே எனக்குப் "செந்தமிழ்த் திலகம்" எனும் பட்டத்தைச் சூட்டிப் பாராட்டி, தமிழ் உலகிற்கும் நகரத்தார் சமூகத்திற்கும் என்னை அறிமுகம் செய்து வைத்தார்கள். அவர்களது ஆசியுடன் இன்று ஆய்வினைப் பூர்த்தி செய்தபின் காரைக்குடி தமிழ்இசைச் சங்கத்தின் மடாதிபதியான சீர்வளர்சீர் மெய்யப்ப சுவாமியை சென்னையில் திருவான்மியூர் நகரத்தார் சங்க 30ஆவது ஆண்டு விழாவில் சந்தித்தேன். இரண்டாம்முறை சந்திப்பில் அவர்களும் எனது பாராட்டு விழாவில் பங்கு கொள்கிறார்கள் என்பதில் மிக்க மகிழ்ச்சி. நகரத்தார் பெருமக்களுக்கு அவர்கள் ஆற்றும் எத்தனையோ நற்காரியங்களில் நாங்களும் பங்குபெற இறையருள் வேண்டுகின்றோம்.

இந்த மண்டபத்திற்குள் எனக்கு ஒரு புல்லரிப்பு புளங்காகிதம் அறிந்தேன். ராம நவமி மண்டபம். எத்தனையோ ராமாயண நிகழ்ச்சிகள், பட்டாபிஷேகங்கள், பூஜைகள், தியாக பிரம்ம ஆராதனைகள் அனைத்தும் நடந்த இடமென அறிந்தேன். நான் பெரிதும் வணங்கும் மஹாசுவாமிகளின் படத்தைக் கண்டேன். அவர்களுக்காகவே இந்த ஆய்வுக் கட்டுரை என்று மகிழ்ந்தேன். இங்கு வந்தவுடன் சகோதரி ஒருவர் ஒரு விநாயகர் அகவல் நூலினை என் கையில் கொடுத்தார். மேல் அட்டையில் பிள்ளையார்பட்டி விநாயகர். பின் அட்டையில் என் ஆய்வேட்டின் மேற்பார்வையாளர் சித்தாந்த சரபம் முனைவர் வை. இரத்தினசபாபதி அய்யா அவர்களின் படம். வீர சைவரான அய்யாவின் மேற்பார்வைத் துணையோடு இந்த ஆய்வேட்டிற்கான பணிகளை செய்தது என் நெஞ்சில் என்றும் நிலைத்திருக்கும். அவரது ஆசியும் பாடங்களும் இரண்டு மாதங்களுக்கு எனக்குக் கிட்டியது என் பூர்வஜென்ம புண்ணியம். நூலை என் கையில் தந்த சகோதரிக்கு என் நன்றி.

சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பு எனது M.Phil., ஆய்வேடான அபிராமி அந்தாதியில் சமய இலக்கியக் கூறுகள் என்பது அபிராமி அந்தாதி ஆராய்ச்சி எனும் பெயரில் நூலாக ஞான சம்பந்தம் பதிப்பக வெளியீடாக திருக்கடவூர் அபிராமி ஸந்நிதியில் தருமை ஆதீனம் 26வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளால் வெளியிடப்பெற்றது. அன்று சந்நிதியில் சந்நிதானம் அவர்கள் "நீங்கள் முனைவர் பட்டத்திற்கு காரைக்கால் அம்மையார் அவர்களை ஆய்வு செய்ய வேண்டும்" என்று அருளாணையிட்டார்கள். அவ்வண்ணமே நான் ஆய்விற்கான பதிவினைச் செய்தேன். அன்று எனக்கு ஆய்வு மேற்பார்வையாளர் திரு. சி. பாலசுப்பிரமணியன். அவரது மேற்பார்வையில் அம்மையாரின் பிறப்பும் வரலாறுமான முதல் பகுதியை வெகு விரைவில் முடித்துவிட்டேன். சி.பா. அவர்களின் மறைவும் என் உடல்நிலையும் தொடர்ந்து ஆய்வினை நிகழ்த்தவொட்டாது தொய்வேற்பட்டது. இறையருளால் அமரர் சித்தாந்தச்சரபம் திரு.வை.இரத்தினசபாபதி, திருமதி. வெ.கனகசுந்தரம் அவர்களின் மேற்பார்வையில் பெரியார் பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் முனைவர்.தங்கராஜ், முனைவர் அரங்க ராமலிங்கம்

ஆகியோரின் உறுதுணையோடு சென்ற ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஜுலை 2015 அன்று சமர்ப்பிக்கப் பெற்றது. பொது பார்வைக்காக வைக்கப்பெற்ற ஆய்வேட்டிற்கு VIVA OC ஆகஸ்ட் 2015 அன்று நிகழ்ந்து... செப்டம்பர் 27, 2015 அன்று சென்னை பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் முனைவர் பட்டமும் பெற்றுக்கொண்டேன்.

விழாவில் பத்திரிகையாளப் பெண்மணி ஒருவர் என்னிடம் கேள்வி கேட்டுக்கொண்டே இருந்தார். M.Phil., பட்டத்தின் தலைப்பு "அபிராமி அந்தாதி" என்றேன். Ph.d., பட்டப் படிப்பின் தலைப்பு யாதெனக் கேட்க பட்டமளிப்பு நடந்துகொண்டு இருந்தது. முதல் வரிசையில் அமர்ந்திருந்த நான் பேசத் தயங்கி எனது சான்றிதழைக் காட்டினேன். அதில் காரைக்கால் அம்மையார் வாழ்வும் அவர்தம் படைப்புகளும் - ஓர் ஆய்வு என்று எழுதியிருந்ததைப் படித்துக் கொள்வார் என்ற நம்பிக்கையில்தான், அந்தப் பெண்ணுக்குத் தமிழ் படிக்கத் தெரியாதாம். ஆகையால் ஆய்வுரை அபிராமி அந்தாதி என்று போட்டு எல்லா பத்திரிகைகளும் அதையே பின்பற்றி எல்லோரும் என் வயதை மட்டும் சரியாகப் போட்டுவிட்டார்கள். ஆய்வேட்டின் தலைப்பினை யாருமே சரியாகப் போடவில்லை. பல வாரங்களுக்குப் பிறகு ஹிந்துப் பத்திரிகையின் தமிழ் பதிப்பின் ஷண்முகசுந்தரம் எனும் நிருபர் நேர்காணலில் எனது ஆய்வேட்டின் தலைப்பைச் சரியாகக் கேட்டுத் தெரிந்து வெளியிட்டார். எனக்கு மகிழ்ச்சி. திருப்தி, அம்மையார் அவர்கள் தனவணிகக் குலத்தவர் என்ற முடிவுதனை நகர மக்கள் சார்ந்த இவ்விழாவில் எடுத்துரைக்கும் வாய்ப்பு இறைவன் அருளால் கிடைத்திருக்கின்றது. எனக்கு மகிழ்ச்சி.

ஆய்வுரையின் தலைப்பு காரைக்காலம்மையார் வாழ்வும் அவர்தம் படைப்புகளும் - ஓர் ஆய்வு என்பதாகும். ஆய்வுரையில் பொருள் அடக்கமாக காரைக்காலம்மையாரின் வாழ்வும் வரலாறும் அருளிப்பாடுகள் சிறப்பு நோக்கு, காரைக்கால் அம்மையார் நோக்கில் ஆன்மீகம் அம்மையாரின் இசைக்கலைத்திறன் எனப் பாகுபாடு செய்யப்பெற்று முன்னுரை முடிவுரையோடு ஆய்வேடு அமைகின்றது. ஆய்வேட்டை நாங்கள் பார்க்கவில்லை. அது நூலாக ஏன் வரவில்லை என்றெல்லாம் பலர் என்னைக் கேட்கலாம். நூலாக வெளிவந்தால் அது ஞானசம்பந்தம் பதிப்பக வெளியீடாகத்தான்

அமைய வேண்டும் என்பது என் பேராசை. செந்தமிழ்ச் சொக்கர் என்று ஆணையிடுகிறாரோ அவ்வாறே அது வெளியாகும். இந்த முடிவில் எந்த மாற்றமும் இருக்காது என்றும் உறுதியாகக் கூறிக்கொள்கிறேன்.

அம்மையார் காரைக்காலில் தனவணிக குலத்தில் புனிதவதி எனும் இயற்பெயர் கொண்டு திருவருள் கொண்டு திருவருள் வாழ்வு நடத்தினார். காரைக்கால் சோழநாட்டு நகரங்களில் ஒன்று. மாயவரம் என்று மருவி பின்னர் மயிலாடுதுறை என்ற தன் இயற்பெயரை நிலைநிறுத்திக கொண்ட மயிலாடுதுறைக்கும், தரங்கம்பாடிக்கும் இடையில் உள்ளது. சிலபேர் பிறப்பதால் அவர் பிறந்த ஊருக்கு அது பெருமை. சிலருக்கு பிறந்த ஊரால் பெருமை. காரைக்காலில் பிறந்ததால் காரைக்கால் அம்மையாருக்குப் பெருமை. புனிதவதி அம்மையார் பிறந்ததால் காரைக்காலுக்குப் பெருமை. இந்நகரில் வாழ்ந்த பல்வேறு வகையினரில் வணிகக் குலமும் ஒன்று. இவ்வணிகர்கள் அறம்போற்றி பல நாடுகளுக்குக் கலமேறிச் சென்று பெருவணிகர்களாக வாழ்ந்தனர்.

"மானமிகு தருமத்தின் வழிநின்று வாய்மையினில் ஊனமில்சீர்ப் பெருவணிகர் குடிதுவன்றி ஓங்குபதி"

என்று போற்றுகிறார் சேக்கிழார். குன்றாத வளத்தைக் கடல்கொண்டு வந்து சேர்த்தது. பெற்ற வளத்தைச் சிறிதும் மாறுபடாத தருமவழியில் செலவு செய்தனர் தனவணிக குலத்தவர் - அக்காலத்தில் வணிகத்தில் சிறந்தோர்க்கு அரசர் "எட்டி" என்ற பட்டம் வழங்கிச் சிறப்பித்தார். எட்டி என்பதே காலப்போக்கில் செட்டி என மருவி, ஆர் விகுதி பெற்று செட்டியார் என்று வழங்கலாயிற்று. செட்டி என்றால் சிக்கனம் என்று பொருள். தனவணிகர் குலத்தார் சிக்கனத்திற்குப் பெயர் பெற்றவர்.

"வீட்டினிற் செட்டாக வாழ்ந்திடுவார் ஏதும்
வீணின்றி மிக்கக் கணக்கிடுவார்"

என்று தனவணிகன் கும்மியில் கருத்துத் தெரிவித்துள்ள சுத்தானந்த பாரதியார் இச் சமுதாயத்தினரை "காணி காணியாக ஈட்டி கோடி கோடியாக அறம் செய்பவர்கள்" என்று போற்றுவார். பழங்காலத்தில் பெருங்குடியினர் என்று போற்றப்பெற்ற வணிகர் குலத்தாரே இன்று நகரத்தார் என வழங்கப் பெறுவர். இவ்வாறு நீண்ட வரலாற்றுப் பெருமைகொண்ட வணிகர் குலத்தில் சிறப்புடன் வாழ்ந்த தனதத்தன்

எனும் பெரும் வணிகருக்கு மகளாகத் தோன்றியவர் காரைக்காலம்மையார். "வணிகர் பெருங்குலம் விளங்க வந்து பிறந்தருளிய புனிதவதியார்" என்று சேக்கிழார் பெருமான் போற்றியுள்ளார். புனிதவதி என்னும் பெயர் ஐந்தெழுத்தினைக் கொண்டது. ஐந்தெழுத்தும், தூய்மையும் இரண்டும் சேர்ந்த பெயராக அமைந்தது புனிதவதி எனும் பெயர். "திருமடந்தை அவதரித்தாள்" என்றும் பொங்கிய பேரழகுமிகப் புனிதவதி என்றும், சேக்கிழார் பெருமான் குறிப்பிடுவதால் திருமகள் போன்ற அழகுடைய பெண் என்பது புலப்படுத்தப்பெறுகின்றது. இத்தனை பேரழகு பொருந்திய பெண் எப்படி மனமுவந்து தன் அழகையெல்லாம் துறந்தாள் என்பதே உலகத்தின் வியப்பு.

புனிதவதியாருக்கும் நிதிபதியின் மகனான பரமதத்தனுக்கும் திருமணம் நடந்து இல்லறம் நல்லறமாக நடக்கின்றது - 2 மாங்கனிகள் வரும் வரையில். பரமதத்தன் அனுப்பிய 2 மாங்கனிகளை பணியாள் கொண்டு கொடுக்க, அம்மையார் வாங்கி வைக்க, பசியோடு வந்த சிவனடியாருக்குச் சோறு மட்டும் வடித்திருந்த நிலையில் கனி ஒன்றை பதார்த்தமாகப் படைக்கின்றார் அம்மையார். வயிறு நிறைந்த சிவனடியார் வாய் நிறைய வாழ்த்திவிட்டுச் செல்கின்றார். வீடு திரும்பிய வணிகன் உணவு உண்ண அமர்கின்றான். தான் அனுப்பிய மாங்கனியில் ஒன்று கேட்கின்றான். அம்மையார் கொடுக்கின்றார். சுவை நன்றாக உளதே, மற்றொன்றையும் கொண்டுவா என்று கூற அம்மையார் விதிர்விதிர்த்துப் போகின்றார். உள்ளே சென்று இறைவனிடம் உருகி வேண்ட அவர் கையில் ஒரு மாங்கனி வருகின்றது. கணவனுக்கு அதைப் படைக்கின்றார். முன்பு சுவைத்த கனியைக் காட்டிலும் இதன் சுவை அதிகமாக உளதே எப்படி என்று கணவன் கேட்க "இறைவன் அருளால் கிட்டியது என்று கூறுகின்றார். இத்துணை தெய்வீகம் நிறைந்த பெண்மணியுடன் எப்படி வாழ்வது என்று, அஞ்சி புனிதவதியாரை விட்டுப் பிரிகின்றான் பரமதத்தன். படகேறி கடல் தாண்டி வணிகம் செய்கின்றான். சில ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் மணந்த புதுமனைவியோடும், மகளோடும் நாடு திரும்புகின்றான். அவன் வந்த செய்தி கேட்டு அவனுடன் அம்மையாரைச் சேர்த்துவைக்க எண்ணிய உற்றாரும் உறவினரும்

அம்மையாரை அழைத்துச் சென்று அவனிடம் நிறுத்துகின்றனர். அம்மையாரைப் பார்த்த மட்டில் அவரது கால்களில் விழுந்து வணங்குகின்றான் பரமதத்தன். தெய்வப் பெண்மணி இவர். நீங்களும் வணங்குங்கள் என்று சுற்றத்தாரிடம் கூறி, இத்தெய்வத்தின் பெயரைத்தான் என் மகளுக்கும் சூட்டியிருக்கின்றேன் என்று கூற அம்மையார் அதிர்ந்து போகின்றார். அவரது இல்லறவாழ்வின் தொடர்ச்சி அறுந்து போகின்றது. முன்பு கூறியதை திரும்பவும் கூறுகின்றேன். திருமகள் போன்ற பேரழகுடையவர் என்று சேக்கிழார் கூறினாரே அத்தனை அழகையும் துறக்க எண்ணினார். எத்தனை வயதானாலும் அழகு குறையக்கூடாது என்பதே பொதுவாகப் பெண்களின் இயல்பாகும். தன் எழில் உருவம் இறைப்பணிக்கு இடையூறாக அமையக்கூடாது என்று எண்ணிய அம்மையார் அவ்வுருவம் மாற வேண்டும் என்று எண்ணியவாறு இறைவனை உருகி உருகி வேண்டி பேய் உருவம் பெற்றார். இந்த இடத்தில் நான் பெரிதும் போற்றும் குருமஹாசந்நிதானம் கூறியதை நினைவு கூறுகின்றேன். சங்கானது கடலில் பிறக்கும்போது அறுவருக்கக்கூடிய சதைப்பிண்டத்தோடுதான் அமையும். அதைத் தொடவும் நாம் கூசுவோம். ஆனால் அந்த வழுவழுத்த சதைப்பிண்டத்தை நீக்கி சுத்தம் செய்தபிறகுதான் சங்கு இறைவன் திருவடிக்குச் சென்று அவனது தீர்த்தத்தைச் சுமக்கும் பேறு பெருகின்றது. அவ்வாறே தன் தசைப் பொதியைத் துறந்து பேய் வடிவம் பெற்றபின்பே அம்மையார் இறைவனது அருகாமையைப் பெற்று அற்புத இலக்கியங்களைப் படைத்தார்" என்று கூறுவார்.

அம்மையார் இளமையில் கல்விக்கூடம் சென்றாரா இல்லையா என்பது புலப்படவில்லை. எங்கும் அதற்கு அடையாளமான குறிப்பு இல்லை. இலக்கண இலக்கியங்களை ஓதிப் புலமை பெற்றார் என்பதற்கும் சான்றில்லை. ஒழுக்கமிகு பெருங்குடியில் பிறந்த புனிதவதி அம்மையார் இளமை தொட்டே சிவநெறியில் நாட்டம் செலுத்தினார் என்பது மட்டும் புலனாகின்றது. இறைவனின் நினைவே அவர் வளர்ந்து சிறக்கும் வரையில் உயிராய் உள்ளத்தினுள்ளே உலாவிக்கொண்டிருந்தது என்பதை மட்டும் விளங்கிக் கொள்ள முடிகிறது. அவர் இயற்றிய முதல் பாடலே அதற்குச் சான்று.

பிறந்து மொழி பயின்ற பின் எல்லாங் காதல்

சிறந்து நின் சேவடியே சேர்ந்தேன் - நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
எஞ்ஞான்று தீர்ப்ப திடர்

என்பது அவர் இயற்றிய அற்புதத் திருவந்தாதியின் முதற் செய்யுள். அடிகளார் அவர்கள் சமீபத்தில் மறைந்த முனைவர் செல்வக்கணபதியின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் கூறியதை என் நெருங்கிய உறவினர் ஒருவர் கூறக் கேட்டேன். "அம்மையார் அழகை எல்லாம் துறந்தாலும் தமிழைத் துறக்கவில்லை" என்றாராம். அதில் எத்தனை பொருள் பொதிந்திருக்கின்றது!

63 நாயன்மார்களில் மூவரே பெண்கள். மங்கையர்கரசியார் ஓர் அரசி, இசைஞானியார் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தாயார். காரைக்கால் அம்மையார் மட்டுமே இலக்கியம் படைத்த பெண் அடியார். அவர் இயற்றிய அற்புதத் திருவந்தாதி 101 பாடல்கள் கொண்டது. திரு இரட்டைமணிமாலை 20 பாடல்கள் கொண்டது. திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் இரண்டில் ஒவ்வொன்றும் 11 பாடல்கள் கொண்டது. ஆகமொத்தம் 143 பாடல்கள் அவரது படைப்பு. 64 வகைச் சிற்றிலக்கியங்களிலும் அந்தாதி, இரட்டை மணிமாலை, பதிகம் என்ற 3 இலக்கியங்களுக்கு அம்மையாரே முன்னோடி. மற்றும் தமிழ் இசைக்கும் புத்துயிர் அளித்தவர் காரைக்கால் அம்மையார் என்றும் கூறலாம். காரைக்காலம்மையார் இயற்றமிழிலும் இசைத்தமிழிலும் வல்லவர்கள் அரிதாகி இருந்த காலகட்டத்தில் உயர்தனிச் சிறப்பிற்கு உரியவராகிறார். பழந்தமிழ் இசைகாத்த அருந்தமிழ்த் தாயாக மிளிர்கின்றார். இறைவனை இசையால் போற்றி இனிமை கண்டவர். மங்கி மறைந்திருந்த தமிழ் இசையைப் பொங்கிப் புத்துணர்ச்சி பெற அளித்தவர். இயல், இசை, நாடகம் (கூத்து) என்றும் முத்தமிழிலும் வல்லவராக விளங்குகின்றார். இயற்றமிழ்ப் பயிற்சியோடு இசையிலும் சிறந்த பயிற்சியுண்டு என்பது மூத்த திருப்பதிகங்கள் பண்ணுடன் அமைந்திருப்பதே சான்றாகும்.

திருவாலங்காட்டில் இறைவன் திருநடம்புரியுங்கால் இசைபாடி மகிழ்ந்தார் என்பது சான்றாகின்றது. அவரது தாளத்துடன் கூடிய பாடல்கள் இன்றைய ஜதி அல்லது நட்டுவாங்கத்திற்கு இணையாகும் எனலாம்.

அம்மையார் அருளிச்செய்த திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகளில் முதற்பதிகமான கொங்கை திரங்கி நட்டப்பாடை பண்ணில் பாடப்பெற்றது. இதுவே இன்றைய கம்பீர நாட்டை, இரண்டாம் திருப்பதிகமான எட்டி இலவம் இந்தளப் பண்ணில் அமைந்தது. இதுவே மாயாமாளகௌளை என்னும் ராகம். நட்டப்பாடை என்பது தமிழ் நாட்டில் வழங்கி வந்த நைவளப்பண் என்கின்றனர் ஆய்வாளர்கள். இந்தளப் பண்ணான மாயாமாளகௌளை தான் இந்திய இசையின் அடித்தளமான சரளி வரிசை அமைக்கப்பெற்ற ராகம். எனவே பழந்தமிழ் இசைக்கே அடித்தளமிட்டு புத்துயிர் அளித்து முன்னோடியாகத் திகழ்ந்தவர் அம்மையார் என்று போற்றலாம்.

எற்புடம்பு எய்திய அம்மையார் தலையால் நடந்து சென்று கைலையில் சிவபெருமானைக் கண்டார் என்பது வரலாறு. தலையால் வரும் இது யாது என உமை வினவ "நம்மை பேணும் அம்மை காண்" என்று சிவனாரால் அம்மையென்று அழைக்கப்பெற்றவர். அம்மையாரிடம் சிவபெருமான் தாம் வேண்டுவது யாது எனக்கேட்க பெருமானிடம் இறவாத அன்பு வேண்டிப் பின் வேண்டுகிறார்.

பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு உண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும். இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவாநீ ஆடும்போது உன் அடியின்கீழ் இருக்க" என்கின்றார்.

திருவாலங்காடு செல் அங்கு என் திருநடனத்தைக் கண்டு மகிழலாம் என்று இறைவன் கூற அம்மையாரும் அங்கு சென்று கைகளில் தாளத்துடன் அமர்ந்து அன்றும் அவர் திருநடனத்தைக் கண்டு மகிழ்ந்து, இன்றும் மகிழ்ந்தவாறு அமர்ந்திருக்கின்றார். திருவாலங்காடு பஞ்ச சபைகளில் முதன்மையான ரத்தினசபை எனப்பெறும். இங்கு ரத்தினசபாபதிப் பெருமான் திருநடமிடுவது காரைக்கால் அம்மையாருக்கென்றே, ஆகும்.

இறுதியாக தனவணிகர் குலத்தவர், நகரத்தாரது வழக்கம் ஒன்றைக் கூறி முடிவு செய்கின்றேன். இக்குலத்தவர் பெண்களுக்கு சீர் செய்யும் சமயம் அவரவர் வசதிக்கேற்ப பொற்றாளமோ, வெள்ளித்தாளமோ, பித்தளைத் தாளமோ வைக்கும் வழக்கம் உண்டு. இப்பழக்கம் காரைக்கால் அம்மையார் வழிவந்த பெண்கள்

என்பதற்காகவும், தமிழ் மறைகளான தேவார திருவாசகங்களைத் தவறாமல் ஓத வேண்டும் என்பதற்காகவும் என்று கொள்ளலாம் என்பதே என் கருத்து.

அம்மையாரின் பாடல்களில் பக்திமையே மேலோங்கி அமைந்துள்ளது. இருப்பினும் இவ்விடத்திற்கு ஏற்ப அவரது இசை அறிவும் பாட்டுத் திறமும் பற்றியே கூற விழைந்தேன். தமிழ் இசைத்தாய், தமிழ் இசை வளர்த்தவர், நம் குலத்தின் பெண் தெய்வமான புனிதவதியாரின் வரலாறு கூறும் வாய்ப்பினை எனக்கு அளித்தமைக்காக இந்தத் தமிழ் இசைச் சங்கத்திற்கு என் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். தமிழ் இசைக்கு சபை அமைத்து 50 ஆண்டுகள் வளர்த்துக் கொண்டாடும் காரைக்குடி இசைச் சங்கம் வாழ்க. தமிழ் இசை வாழ்க. சைவ சமயம் வாழ்க. திருமுறைகள் வாழ்க. அம்மையார் புகழ் ஓங்குக. நன்றி வணக்கம்.

இப்படி ஒரு அறிவிப்புப் பலகை
இத்தாலி – வாடிகனில்!

ஆறுதல்கள் காயங்களை ஆற்றுவதில்லை
அழுவதனால் கஷ்டங்கள் மாறுவதில்லை
தூறல்களால் பயிர்கள் விளைவதில்லை
என் தேசத்தை நாசமாக்கிய ஒரே சொல்
"இலவசம்".

- தவத்திரு குன்றக்குடி அடிகளார்

- நேரில்கண்டு எழுதியனுப்பியவர்.
ஆர். சிவசங்கரன் M.Tech., குன்றக்குடி

வேலைநிறுத்தம் என்பது பந்தலிட்டு, விளம்பரம் செய்து, கொடிகட்டி உண்ணாவிரதம் இருப்பது மட்டும் அல்ல! அலுவலகங்களில், தொழிற்சங்கங்களில் பணிக்களங்களில் வந்து, பணியாற்றாமல், அரட்டை அடிப்பதும், சொந்த வேலைகளில் ஈடுபடுவதும் வேலை செய்யாமல் நேரத்தை வீணடிப்பதும் வேலை நிறுத்தமே.

- பொன்னம்பல அடிகளார்

உலகத் திருக்குறள் பேரவை நடத்திய மதுரையில் திருக்குறள் திருவிழா



உலகப் பொது மறையாக விளங்கும் திருக்குறளின் மகத்துவத்தைப் போற்றும் வண்ணம் மதுரையில் திருக்குறள் திருவிழா 2016 ஏப்ரல் 1,2,3 தேதிகளில் மூன்று நாட்கள் திருக்குறள் செம்மல் திரு. ந. மணிமொழியன் அவர்கள் தலைமையில் வெகுசிறப்பாக நடைபெற்றது. 1.4.2016 மாலை 5.00 மணி அளவில் தொடக்கவிழா நடைபெற்றது. மாட்சிமை தங்கிய முகவை மன்னர் திருமிகு. நா.குமரன் சேதுபதி அவர்கள் திருவள்ளுவர் உருவப் படத்தினை திறந்து வைத்தார். திருமதி. கமலாதேவி மணிமொழியன் அவர்கள் மங்கள தீபம் ஏற்றி விழாவினை தொடங்கி வைத்தார். திருக்குறள் முற்றோதலுடன் விழா தொடங்கியது. மேனாள் துணை வேந்தர் திரு.ம. திருமலை அவர்கள் வள்ளுவம் ஒரு வாழ்வியல் என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். மதுரைத் தமிழ்ச் சங்கச் செயலாளர் திரு. எஸ். மாரியப்ப முரளி திரு.ஆர். மோகன் காந்தி பொறியாளர் ஏ.சி. காமராஜ் மனித நேயம் பேராசிரியர் ஏ.எம். ஜேம்ஸ் ஆகியோர் முன்னிலை வகித்துச் சிறப்பித்தனர்.

இரவு 7.00 மணியளவில் தமிழறிஞர் சாலமன் பாப்பையா அவர்கள் தலைமையில் திருவள்ளுவர் முதலிடம் தருவது "உறவிற்கா? நட்பிற்கா?" என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடைபெற்றது.

2.4.2016 காலை 10.00 மணியளவில் இரண்டாம் நாள் நிகழ்ச்சியாக 60,000 மாணவ மாணவியர் பங்கேற்ற மாநிலம் தழுவிய திருக்குறள் தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் பள்ளிகளுக்கும்

பரிசளிப்பு விழா நடைபெற்றது. குன்றக்குடி ஆதீனம் தவத்திரு பொன்னம்பல அடிகளார் மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கி அருட்பேருரை நிகழ்த்தினார்.

எழுத்தாளர் இந்திரா சௌந்திரராஜன், திரு. டாக்டர். கு. கண்ணன், திரு. பொன் சந்திரசேகர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

மாலை 5.00க்கு பொற்கிழிக் கவிஞர் திரு.சொ.சொ. மீ. சுந்தரம் அவர்கள் தலைமையில் "வள்ளுவர் வழியில் வாழ்ந்து சிறந்தவர்கள்" என்ற தலைப்பில் கவியரங்கம் நடைபெற்றது.

இரவு 7.00 மணியளவில் "கலைமாமணி" முனைவர் இளசை சுந்தரம் அவர்கள் தலைமையில் "வள்ளுவத்தை பின்பற்றத் தவறும் மக்கள் குற்றவாளிகள்" என்ற தலைப்பில் வழக்காடு மன்றம் நடைபெற்றது.

3.4.2016 காலை 10.00 மணியளவில் பெரும்புலவர் திரு. இளங்குமரனார் தலைமையில் திருக்குறள் கருத்தரங்கம் நடைபெற்றது. முனைவர் மு. அருணகிரி, முனைவர் யாழ் சு. சந்திரா, டாக்டர் ஆனந்த் ஆகியோர் கருத்துரை வழங்கிச் சிறப்பித்தனர்.

மாலை 5.00 மணிக்கு நிறைவு விழா நடைபெற்றது. விழாவிற்கு திருக்குறள் செம்மல் திரு. ந. மணிமொழியனார் தலைமை தாங்கினார். டாக்டர் ஒளவை மெய்கண்டான் அவர்கள் சிறப்புரையாற்றினார். மாண்புமிகு நீதியரசர் திருமிகு. ஆர். மகாதேவன் அவர்கள் விழா நிறைவுப் பேருரை நிகழ்த்திச் சிறப்பித்தார். டாக்டர். வி.வி. முத்துசாமி திரு.வி. வரதராசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

இரவு 7.00 மணியளவில் நகைச்சுவைப் பேரரசர் திரு.கண. சிற்சபேசன் அவர்கள் தலைமையில் தமிழ் இலக்கியத்தின் நிலைப் பேற்றிற்குப் பெரிதும் காரணம் அழகின் சிரிப்பா? அறிவின் சிறப்பா? அறத்தின் செழிப்பா? என்ற தலைப்பின் இலக்கிய நகைச்சுவைப் பட்டிமன்றம் நடைபெற்றது.

முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேல் திருக்குறள் பணியினை சிரமேற்கொண்டு எவ்வித எதிர்பார்ப்புமின்றி செய்து வரும் உலகத் திருக்குறள் பேரவை முதன்மைப் பொதுச்செயலாளர் மதுரை மாவட்டத் தலைவர் திருக்குறள் செம்மல் திரு.ந. மணிமொழியனார் அவர்கள் விழாவினை அனைவரும் பாராட்டும் வண்ணம் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.

கவிஞர் மார்சல் முருகன் கவிபாரதி ஆர். அசோக்ராஜ் புலவர் சேர்மன், திரு.அ.கி. செ. திருமாவளவன், திரு. சொ.கு. முருகேசன் ஒருங்கிணைப்பாளர்களாக இருந்து விழாவினைச் சிறப்புறச் செய்திருந்தனர்.

உலகத் திருக்குறள் பேரவை – தூத்துக்குடி

பட்டிமன்றம்



உலகத் திருககுறள் பேரவை, தூத்துக்குடி மாவட்டக் கிளையின் சார்பில் கவிஞர் கண்ணதாசன் திரைப்படப்பாடல்களில் புகழுக்குப் பெரிதும் காரணம் காதல் பாடல்களே - தத்துவப் பாடல்களே என்ற தலைப்பில் பட்டிமன்றம் பேராசிரியர் குமரிக்கண்ணன் தலைமையில், முன்னாள் மாவட்ட வருவாய்த்துறை அலுவலர் சக்திவேல் முன்னிலையில் நடைபெற்றது.

பேராசிரியர் சவகர்லால் வரவேற்றுப் பேசினார். கல்லூரி மாணவி செல்வி பொன். விநாயகம் குறளுரை வழங்கினார். காதல் பாடல்களே என்ற அணியில் திருக்குறள் மோ. அன்பழகன், ஆசிரியர் சுந்தரி, ஆசிரியர் பாலகுருசாமி, தத்துவப்பாடல்களே என்ற அணியில் ஆசிரியர் தேவிகா, ஆசிரியர் சுந்தர் சிங், கனகலெட்சுமி ஆகியோர் பேசினார்கள்.

கண்ணதாசனின் புகழுக்குப் பெரிதும் காரணம் தத்துவப்பாடல்களே என்று நடுவர் பேராசிரியர் குமரிக்கண்ணன் தீர்ப்பு வழங்கினார்.

பாலசுப்பிரமணியன் நன்றி கூறினார்.

இக்கூட்டத்தில் திருக்குறள் உரையாசிரியர் வாய்மை, பேராசிரியர் குருலெட்சுமி, பேராசிரியர் அருள்மணி, புலவர் சங்கரலிங்கம், மதுரை கருவூல அலுவலர் கணேசன், ஆசிரியர் மனோ சேவியர், ஆசிரியர் அருமை நாயகம், அறிவுச்செல்வம், தனபால், இயேசுதாசன், முருகையா, மணிகண்டன் பேரவை உறுப்பினர்கள் மற்றும் தமிழ் நண்பர்கள் கலந்து கொண்டனர்.

சிலம்பில் தொல்காப்பியப் பதிவு

(தமிழாகரர். தெ. முருகசாமி)

நம் தாய்மொழியாம் தமிழ், செம்மொழித் தகுதி பெறுவதற்கு முதற் காரணமாக இருந்த நூல் தொல்காப்பியம். அதன் தோன்றிய காலத்தை கி.மு.5ஆம் நூற்றாண்டு என வரையறுத்தாலும் அதனுள் கூறப்படும் பொருளால் அதனது காலத்தை வரையறுக்க முடியாததாகும். அதனால் அந்நூல் தொல்காப்பியம் எனப்பெயர் பெற்றாலும் அது காக்கும் தொன்மை பற்றியதை இருகூறாகப் பகுக்கலாம். மொழிக்கான இலக்கணம் பற்றியது ஒரு கூறு. அம்மொழி பேசுவோரின் வாழ்வியலுக்கான இலக்கணம் பற்றியது மறு கூறு.

தொல்காப்பியத் தொன்மையின் தாக்கம் வழி வழியான நூல்களில் படிந்துள்ளன. இவ்வுண்மை, தொல்காப்பியத்திற்கு உரைகண்ட உரையாசிரியர்கள் பலரும் எடுத்துக்காட்டாகத் தந்த சங்கப் பாக்களால் உணரலாம். மேலும் அடுத்தடுத்து வந்த நூலாசிரியர்களின் படைப்புக்களாலும் உணரலாம். இந்த வகையில் தொல்காப்பியர் கருத்தை இளங்கோவடிகள் தாம் யாத்த சிலப்பதிகாரத்தில் இடம்பெறச் செய்ததைக் கீழ்வருமாறு உணர்வோமாக!

மொழிக்கு இலக்கணமாகத் திகழும் தொல்காப்பியம் அம்மொழிபேசும் மக்களின் வாழ்விற்கும் இலக்கணம் கூறும் நூலாகவும் திகழ்கிறது. மொழிக் கூறுக்கான இலக்கணத்தைத் தொல்காப்பிய எழுத்ததிகாரத்திலும் சொல்லதிகாரத்திலும் காணலாம். மொழி பேசுவோரின் வாழ்வியல் இலக்கணத்தைப் பொருளதிகாரத்தால் உணரலாம்.

பேச்சும் எழுத்துமான மொழிநடையில் சிலப்பதிகாரம் ஆசிரியப்பாச் செய்யுளால் யாக்கப்பட்டதால் எழுத்து நடைக்கான இலக்கணப் பதிவையே கூடுதலாகக் காணலாம். இந்நிலையில் உரைநடை செய்யுள் நடையான இருவேறு எழுத்துநடையில் செய்யுளுக்கான இலக்கணக் கூறினையே காணலாம் என்க!

எழுத்ததிகார மொழிமரபில் செய்யுளில் உவமைப் பொருளில் வரும் போலும் என்ற சொல் "போன்ம்" என வரலாம் என்பது தொல்காப்பிய விதி.

செய்யுள் இறுதிப் போலி மொழிவயின்
னகார மகாரம் ஈரொற் றாகும் (18)

இந்நூற்பாவின்படிப் போலி என்பது போலும் என்பதாகும். ஏனெனில் போலும் என்பதுதான் நூற்பா கூறும் னகாரமகமாம் ஈரொற்றாகும் என்ற கருததால் அது போன்ம் என்பதாகும். இதனாலும் போலும் போன்ம் என்பதும் ஒன்று எனத் தெரிகிறது.

இங்ஙனம் கூறுவதில் மேலும் ஓர் இலக்கணக்கூறு உள்ளதைத் தொல்காப்பியர் "னகாரை முன்னர் மகாரம் குறுகும்" (19) என்பதாகக் கூறுகிறார்.

போலும் என்றதில் உள்ள மகரம் (ம்) அரை மாத்திரைபோலப் போன்ம் என்பதில் உள்ள மகரம், அரையளவின்றிக் கால் மாத்திரையாய்க் குறுகுமாம். அதாவது ன்-முன் ம் குறுகி ஒலிப்பதால் அதனை மகரக் குறுக்கம் என்பர். இந்த மகரக் குறுக்க இலக்கணத்தை இளங்கோவடிகள் கண்ணகி பாத்திரத்தோடு பொருத்திக் கூறுகிறார்.

கண்ணகியைப் பிரிந்து மாதவியிடம் வாழ்த்த கோவலன் கானல்வரிப் பாட்டால் அவளைப் பிரிந்து மீண்டும் கண்ணகிபால் வந்துற்றான். அப்போது அவன் மாதவியால் செல்வமெல்லாம் இழந்து வாழ்ந்ததற்காக மனம் வருந்துவதாகக் கூறுகிறான். இந்நிலையில் கண்ணகி, கோவலனிடம் "சிலம்புள கொண்ம்" எனத் தன்காற் சிலம்புகளை எடுத்துத் தருகிறாள்.

இவ்வாறு "கொண்ம்" என்று கூறியதுதான் போன்ம் என்பது போன்ற மகரக் குறுக்கச் சொல்லாம் என்க! இஃது எழுத்திலக்கணமானாலும் இதில் கண்ணகியின் வாழ்க்கைச் சூழல் பதிவாகி உள்ளதென உணருமாறுள்ளது.

கோவலனது பிரிவால் பாதிக்கப்பட்ட கண்ணகி முழுவாழ்க்கையையும் துய்க்காத பாதியளவு வாழ்வினளாக வாழ்ந்தாள். இந்நிலையில் கணவன் பொருள் வறுமையால் தம்பால்

வந்துள்ளானோ எனக் கற்பித்துக்கொண்ட அளவில் தனது உள்ளக் குமுறலை அடக்கிக் கொள்ளுமாறு "சிலம்புள கொண்ம்" என்றாளோ? என எண்ணத் தோன்றுகிறது.

அதாவது இயல்பான 1/2 மாத்திரையான மகரம் ண்-முன் கால் மாத்திரையாய்க் குறுகியது போலக் கண்ணகி கணவனது போக்கில் குறுக்கிட முடியாமலிருந்த நிலையில் மேலும் பொருள் பெற வந்ததாகக் கருதிக் கணவனிடம் சிலம்பை நீட்டினாள் என்பது அவளின் உள்ளக் குமுறலை அடக்கி உணர்த்தும் சொல்லாகவே "கொண்ம்" என்றார் இளங்கோ!

வாய்விட்டுச் சொல்லமுடியாத மெய்ப்பாட்டையே இளங்கோவடிகள் "ம்" என்ற மகரக்குறுக்கமுடன் வெளிப்படையாகக் கூறினாலும் அவ்வெழுத்து வாயின் இரண்டு உதடுகளும் மூடிக் கொண்ட அளவில் வாய்க்குள்ளேயே ஒலிக்குமாறுள்ளதைச் செயல்முறைப்பான்மையில் அதாவது செயல்முறைக்கு உகந்த நிலையில் (PRACTICAL) வெளிக்காட்டா குமுறலை வெளிப்படுத்தினார் என்க! ஆக உளக் குமுறலான உணர்வை வெளிப்படுத்த இந்த மகரக் குறுக்க விதியே பொருத்தமாக அமைந்துள்ளது எனலாம்.

யாசித்து நீட்டிப் பழகிய கையையும் வாங்கும் பணத்தைப் போட்டுப் பழகிய பையையும் உடையவனின் பழக்கத்தை மாற்றமுடியாததைப் போலக் கோவலன் கூறிய,

சலம்புணர் கொள்கைச் சலதியொ டாடிக்
குலம்தரு வான்பொருட் குன்றந் தொலைந்த
இலம்பாடு நாணுத் தரும் (கனாத்திறம்)

என்பதை நம்பத்தயாராக இல்லாததால்தான் கண்ணகி "சிலம்புள கொண்ம்" எனக் கூறிவிட்டாள். இக்கூற்று, வான்பொருள் இழந்ததை மீட்டுக்கொள்ளலாம் எனக் கண்ணகி - கோவலனுக்கு ஊக்கம் கொடுக்கும் அளவில் அச்சொற்களைப் பரிமாறவில்லையாயினும் கோவலனுக்குத் தன் மனைவியின் சொற்கள் தன் தாழ்நிலையைப் போக்கிக் கொள்ளக்கிடைத்த நெம்புகோல் வாசகங்களாகவே தென்பட்டதால்,

சிலம்பு முதலாகச் சென்ற கலனோடு
உவந்தபொருள் ஈட்டுதல் உற்றேன் (கனாத்

என்றான். ஈண்டுக் கண்ணகி சிலம்புள எனக் கணவனது பொருள் வறுமையைக் கருதியே கூறினாள் என்பதற்கு அகச் சான்றாகவே "சென்ற கலனோடு உவந்த பொருள்" என்ற கோவலனின் வாசகம் அமைந்துள்ளது. முன்பெல்லாம் இதுபோல் வந்து வந்து பொருளை வாங்கிச் சென்றதன் உண்மையை வெளிப்படுத்தியதால் தான் "சென்ற கலனோடு" என்ற தொடருக்கு உரை எழுதிய உரையாசிரியர்கள் "முன்பு நான் வாங்கியழித்த கலனையும் தேடித் தொகுக்கத் துணிவு கொண்டான்" என உரைகண்டனர். ஆக, கண்ணகியின் சிலம்புள கொண்ம் என்ற கூற்று, "முன்பு போலவே பொருள் வாங்கவே வந்தவன் என்பதால் கூறிய கூற்று" என்பது உறுதியாகிறது.

இவ்வாறு பாத்திரங்களின் உரையாடலில் பளிச்சிடும் வார்த்தைகள் கதைப்போக்கிற்கேற்ப எழுத்திலக்கணப் பான்மையில் பொருத்தமாய்க் கூறியதால் இளங்கோவின் சிலப்பதிகாரம் நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரமாய் இலங்குகின்றதன்றோ! நூற்பா,ன் பற்றிய தானாலும் அது ண் என்பதற்கும் பொருந்தும்.

மேற்கண்டாங்குப் பொருத்தமான கதைப்பாங்கின்படி ணகரமகரம் - ஈரொற்றாகவும் மகரம் குறைந்ததாகவும் கூறியது போல இளங்கோ வேறெங்கும் கூறவில்லையாயினும், காடுகாண் காதையில் வயந்த மாலை வடிவில் வந்த வனசாரணி, கோவலனிடம் மாதவியின் கூற்றாகக் கூறும்போது, "கணிகையர் வாழ்க்கை கடையே போன்ம்" எனக் கூறியது. அதாவது "கோவலன், தன்னைக் கணிகையள் எனக் கருதிப்போலும் வெறுத்தான்" என மாதவி கூறும் கூற்றில் உள்ள போன்ம் என்ற சொல், னகரமகரம் ஈரொற்றாகும் என்பதற்குப் பொருந்துமே தவிர அங்ஙனம் நிற்பது மகர ஒலிக்குறுக்கத்திற்கு அன்று என்பதாம். இது கொண்ம் எனக் கூறிய கதை தழுவியதற்குப் பொருத்தமான கதாபாத்திரக் கூற்றன்று எனலாம்.

இங்ஙனம் மெய்எழுத்து அரைமாத்திரை அளபு ஒலிக்கும் என்பதைத் தொல்காப்பியர் "மெய்யின் அளபே அரைஎன மொழிப" (எழுத்.நூன்.11) என்பதாக விதி கூறியதாலும் மெய்யெழுத்து பற்றி உணர்ந்த நாம் உயிர்மெய் எழுத்து பற்றியதோர் இலக்கணத்தைக்

கதை தழுவிய பாங்கில் தொல்காப்பியர் வழி இளங்கோவடிகள் கூறியதையும் கண்டு களிக்கலாம்.

உயிரும் மெய்யும் சேர்ந்தது உயிர்மெய். இதுபற்றிய இலக்கண உண்மையைத் தொல்காப்பியர் நூன்மரபில் "மெய்யோடு இயையினும் உயிரியல் திரியா" (10) என்ற நூற்பாவால் நுட்பமாக உணர வைத்தார். மெய்யெழுத்துடன் உயிர்கூடி, உயிர்மெய் எழுத்தானாலும் அவ்வுயிர்மெய் யெழுத்திலுள்ள உயிர் தன் மாத்திரை இயல்பை இழக்காமல் அதாவது குறிலாயின் ஒரு மாத்திரை நெடிலாயின் இரண்டு மாத்திரை என்பதை இழக்காமலேயே உயிர்மெய்யளவளவாய் நிற்கும் என்பது கருத்து.

இந்த உயிர்மெய் எழுத்துச் சிறப்பின்படி வி,வே என்ற வகரவர்க்கத்தின் இரு எழுத்துக்களை இளங்கோ கையாளும் திறத்தால் சிலப்பதிகாரத்தை நெஞ்சையள்ளும் சிலம்பாக்கினார் எனலாம்.

கானல்வரியில் கோவலன் மாதவி இருவரும் மாறி மாறி வரிப்பாடல் பாடுவது பற்றிக் கூறும்போது முதலில் கோவலன் பாட ஆரம்பிப்பதைக் கவிக்கூற்றாக இளங்கோ, "அவனும் - காவிரியை நோக்கி னவும் கடற்கானல் வரிப்பாணியும், மாதவிதன் மனமகிழ வாசித்தல் தொடங்குமன்" என்றார்.

இக்கூற்றில் காவிரி என்றவர், கோவலன் பாடுவதாகக் கூறும்போது,

திங்கள் மாலை வெண்குடையான்
சென்னி செங்கோ லதுவோச்சக்
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி காவேரி,
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவா தொழிதல் கயற்கண்ணாய்
மங்கை மாதர் பெருங்கற் பென்று
அறிந்தேன் வாழி காவேரி!

என்றார். ஈண்டுக் காவிரியைத்தான் காவேரி எனக் கூறுகிறார். இக்காவேரி என்றது கோவலனின் கூற்று. அதுவும் இசையாய் அமைந்த இசைக் கூற்றெனலாம்.

கவிக் கூற்றில் அதாவது இளங்கோ கூறுவதான கூற்றில் "காவிரி" என்றது உணரப்பாங்கு போன்ற இயல்நடை. இதில் உள்ள "வி" என்ற குறில் எழுத்தான உயிர்மெய்தான் கோவலனின் இசைப்பாட்டில் "காவேரி" என, வே - என்ற நெடில்உயிர் மெய்யாகியுள்ளது. இசையாகப் பாடும்போது காவிரி எனக் குறுகி ஒலிக்க அதாவது இசைக்கமுடியாது. அங்ஙனமே ஒலித்தாலும் ஒலிக்குறை உண்டாகும். ஆனால் அங்காத நிலையில் காவேரி எனுங்கால் ஓசை இன்பம் செவிக்கு விருந்தாகும். இந்த இருவேறு நுட்பத்தையே குறில் நெடில் என்ற அளபால் உயிர்மெய் எழுத்தின் சிறப்பை விளக்கினார் இளங்கோ.

ஆ ஈ ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னும்
அப்பாலேழும் ஈரளவு இசைக்கும் (நூன்.4)

என்ற விதிப்படி உயிர்மெய்யும் அவ்வாறே இசைப்பதானாலும் அந்த நெடிலை - அதே குறில் எழுத்தின்வழி ஒரே இடத்தில் வைத்தே வேறுபிரித்து விளக்கினார் என்பது குறில் நெடில் என்றதற்கும் கூடுதலான கதை தழுவிய அளவில் ஓர் உன்னதத் தகவலன்றோ!

ஆக, காவிரி என்றது கவிக்கூற்றான உரைப்பாங்கு, காவேரி என்றது இசைப்பாங்கான கதாபாத்திரக் கூற்று.

"ஈண்டு – காவேரி என்றதை நெடிலாக உணரவேண்டுமே யன்றி எழுத்தின் அளபெடுக்கும் தன்மையேடு பொருத்தக் கூடாது என்பதால்

புள்ளியில்லா எல்லா மெய்யும்
உருவுரு வாகி அகரமோடுயிர்த்தலும்
ஏனை உயிரோடு உருவுதிரிந் துயிர்த்தலும்

என்ற விதிப்படி (நூன்.17) உயிர்மெய் பற்றிய வடிவம், ஒலி கூறும் வகையில் சிலப்பதிகாரக் கானல்வரியின் காவிரி - காவேரியை உணரவேண்டும்" என்க!

> பொதுத் துறைகள் நமது உடைமைகள் என எண்ணிப் பார்க்க வேண்டும். பொதுமருத்துவம், பொதுக்கல்வி என்பது தரம் குறைவானது என மக்கள் மனதில் ஆழமாக விதைக்கப்பட்டுவிட்டது. அதை மாற்றவேண்டிய பொறுப்பு ஆசிரியர்கள் கையில் உள்ளது.
>
> \- பொன்னம்பல அடிகளார்

உலகத் திருக்குறள் பேரவை தூத்துக்குடிக் கிளையின் சார்பில் முப்பெரும் விழா



நடுவணரசின் திருவள்ளுவர் விருது பெற்ற உலகத் திருக்குறள் பேரவையின் தலைவர், திருவண்ணாமலை ஆதீனம், குன்றக்குடி 46ஆவது குருமகாசந்நிதானம் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்களுக்குப் பாராட்டுவிழா.

பாபநாசம் திருவள்ளுவர் கல்லூரியின் முன்னாள் முதல்வர் பொற்கிழிக்கவிஞர் ச.சவகர்லால் - திருமதி.ச. பழனியம்மாள் இணையர்க்கு முத்துவிழா.

உலகத் திருக்குறள் பேரவை தூத்துக்குடி மாவட்டக் கிளையின் 15ஆவது ஆண்டு தொடக்கவிழா ஆகிய முப்பெரும் விழா 26.5.2016இல் தூத்துக்குடி தி.ஆ.திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

பாராட்டுவிழா தி.ஆ.தெய்வநாயகம் தலைமையிலும், வாழ்த்தரங்க முத்துவிழா தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்கள் தலைமையிலும், திருக்குறள் உரையாசிரியர் வாய்மையார் முன்னிலையிலும் நடைபெற்றன.

பேரவைத் தலைவர் ஆ.திருச்சிற்றம்பலம், பேராசிரியர் பூங்கொடி நாகராசன் வரவேற்றுப் பேசினார்கள்.

உலகத்திருக்குறள் பேரவையின் தூத்துக்குடி மாவட்டக் கிளையின் செயலாளர் திருக்குறள் மோ.அன்பழகன் விழாத் தொகுப்புரை வழங்கினார்.

சைவநெறிகாந்தி மற்றும் பேரவை உறுப்பினர்கள் உரையாற்றினார்கள் - நிகழ்ச்சியில் குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், முத்துவிழா தம்பதியினரை வாழ்த்தி உரையாற்றினார். தமிழ்த் திரையுலகில் தமிழ்த்தாய்க்கு மகுடம் சூட்டிய கவிஞர்கள் கண்ணதாசன், வாலி, பட்டுக்கோட்டையார், வைரமுத்து குறித்த இலக்கிய இசைச்சுழலும் சொற்போர் நிகழ்ச்சிக்கு பேராசிரியர் குமரிக்கண்ணன் நடுவராக இருந்தார். புலவர் சங்கரலிங்கம் ஞானியார், ஆசிரியர் அருமைநாயகம், கசுதூரி திலகம் ஆகியோர் கருத்துரை வழங்கினார்கள்.

தரும இராமச்சந்திரன், நாகராசன், ஏ.வி.எம்.இலக்குமணன், புலவர்.சத்திய ஞானராசு, சக்திவேல், தனபாலன், ஆசிரியர்கள் மனோ சேவியர், பொன் தேவிகா, ஆ. சுந்தரி, இலக்குமணன் முருகேசன், இளமுருகு, தனபால் மற்றும் பேரவை உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். பொற்கிழிக் கவிஞர் சவகர்லால் ஏற்புரை நிகழ்த்தினார். செந்தில் முருகன் நன்றி கூறினார்.

அன்பான வேண்டுகோள்!

சமுதாய மாமுனிவராகத் திகழ்ந்த நமது அருள்நெறித் தந்தை தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் ஆழமான சிந்தனைகளை அடியொற்றி நடைபோடும் "மக்கள் சிந்தனை" மாத இதழ் மேலும் பலம் பெறுவதற்குத் தங்களின் ஆதரவு தேவை. நமது கருத்து பரவலாக மக்களைச் சென்றடைய இதழ் அவசியம்.

ஆயுள் சந்தாவாகவோ, அல்லது ஆண்டுச் சந்தாவாகவோ அல்லது புரவலர் தொகையாகவோ மக்கள் சிந்தனை இதழுக்கு வழங்கி மக்களின் சிந்தனைகளை அகம்கொண்டு வெளிவர உதவுங்கள். "மக்கள் சிந்தனை"யின் பணி சிறப்புடன் தொடர வாசகராக, படைப்பாளராக சந்தாதாரராக விளம்பரதாரராக மாறுங்கள்; இன்றே சமய சமுதாயப் பணியை வலிமைப்படுத்துங்கள்.

- ஆசிரியர்

மலேசிய அருள்நெறித் திருக்கூட்டம்
கோலாலம்பூர்
அறுபதாம் ஆண்டு விழா
(30.04.2016 மற்றும் 01.05.2016)
நிகழ்வு - மகிழ்வு

குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்தில் 45-வது குருமகா சன்னிதானமாக எழுந்தருளி, அருளாட்சி செய்து, சைவ சமயத்திற்கும். தமிழுக்கும், சமுதாயத்திற்கும் வளம் சேர்த்து நல்வழிகாட்டியவர் மகாசன்னிதானம் தவத்திரு குன்றக்குடி அடிகளார் ஆவார்கள்.

இவர்கள் 1952-ல் தோற்றுவித்த இயக்கமே "அருள்நெறித் திருக்கூட்டம்". தமிழகத்தில் இந்த இயக்கம் வளர்ந்து சைவதிற்கும், தமிழுக்கும், சமுதாயத்திற்கும் பல நற்பணிகளைச் செய்தது. இந்த அருள்நெறித் திருக்கூட்டம் தமிழகம் மட்டுமின்றி மலேசியா, இலங்கையிலும் கால் கொண்டு பரவியது.

மலேசிய நாட்டில் பக்தி இயக்கத்தில் இருந்த அன்பர்களின் பெரும் முயற்சியால் 23.01.1955-ம் ஆண்டில் அருள்நெறித் திருக்கூட்டம் தொடங்கப்பட்டது.

மலேசிய அருள்நெறித் திருக்கூட்டம் தொடங்கிய விதம் குறித்து மேற்படி திருக்கூட்டத்தின் வாயிலாகவே அறிந்து கொள்ளலாம்.

தோற்றம் :

மலேசியா அருள்நெறித் திருக்கூட்டம். 23.01.1955 அன்று, தமிழகத்திலிருந்து வருகை புரிந்திருந்த திருவண்ணாமலை ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ குன்றக்குடி அடிகளார் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இந்து சமய பிரச்சாரத்திற்கென ஓர் அமைப்பு அவசியம் என்று உணர்ந்த குன்றக்குடி அடிகளார், தாமே அமைப்புத் தலைவராக இருந்து திருக்கூட்டத்தைத் தோற்றுவித்தார். தொடங்கப்பட்ட காலக்கட்டத்தில், கோலாலம்பூர் ஸ்ரீ மகாமாரியம்மன் கோயிலை அலுவலகமாகக் கொண்டு, அக்கோயிலாரின் பெரும் ஒத்துழைப்புடன் நாடு முழுவதும் திருக்கூட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

திருக்கூட்டத்தின் நோக்கங்கள் :

- பொது நிலையில், இந்து சமய அறிவையும், நடைமுறை வழக்கங்களையும், சிறப்பு நிலையில் சைவ சித்தாந்தத்தையும், கற்பிப்பதும், பரப்புவதும்.

- சமய வகுப்புகள், மாநாடுகள், கூட்டுப் பிரார்த்தனைகள் நடத்துதல், சமயம் சார்ந்த சிறப்பு நாட்களைக் கொண்டாடுதல்.
- சமய ஆசிரியர்களையும், தொண்டர்களையும் பயிற்றுவிப்பதன் வழி, அனைத்து மக்களிடத்தும் சமய அறிவையும் தெளிவையும் கொண்டு சேர்த்தல்.
- தனது நோக்கங்களைப் பரப்புவதற்கு உதவக் கூடியவை என்று திருக்கூட்டம் கருதும் ஆய்விதழ், பருவ இதழ்கள், நூல்கள், துண்டு அறிக்கைகள் போன்றவற்றை, அமலில் உள்ள சட்டங்களுக்கு உட்பட்டு, விற்பது அல்லது இனாமாக விநியோகிப்பது.
- பள்ளிகள், அனாதை இல்லங்கள், மருத்துவமனைகள், பேறுகுறைந்தோருக்கான இல்லங்களை அமைத்தல், பராமரித்தல், நடத்துதல், அவற்றுக்கு உதவி செய்தல், கல்வி – நற்பணி - இடருதவி தொடர்பான பணிகளை மேற்கொள்ளல்.

நமது செட்டிநாட்டுப் பகுதி தேவகோட்டையைச் சேர்ந்த திரு. கா. இராமநாதன் செட்டியார் முன்னின்று, மலேசிய அருள்நெறித் திருக்கூட்டத்தை நமது 45-வது மகாசன்னிதானம் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களை வரவழைத்து தொடங்கியுள்ளார். வளர்த்துள்ளார். திரு. கா. இராமநாதன் செட்டியாருக்குப் பின் அவரது மருமகனார் திரு. டான்ஸ்ரீ சோமசுந்தரம் செட்டியார் வழிநடத்துதலிலும் திருமதி. முனைவர். தேவபூபதி நடராஜா அவர்கள் தலைமையிலும் அருள்நெறித் திருக்கூட்டம் ஆலவிருட்சமாக வளர்ந்துள்ளது. தற்போது அதன் தலைவராக திருமதி. முனைவர். கே. திலகவதி அவர்களும், உபதலைவராக திரு. டத்தோ டாக்டர். வ. கதிரேசன் அவர்களும் (டான்ஸ்ரீ சோமசுந்தரம் செட்டியாரின் மருமகன்) பொறுப்பேற்று சிறப்புடன் இயக்கத்தை நடத்தி வருகிறார்கள்.

இந்த அருள்நெறித் திருக்கூடத்தின் 50-ம் ஆண்டு பொன்விழாவிற்கு நமது குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்தின் 46-வது மகாசன்னிதானமாக எழுந்தருளி அருளாட்சி செய்து வரும் மகாசன்னிதானம் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்கள் 05.08.2005 முதல் 07.08.2005 வரை நடந்த பொன்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

மலேசிய இந்து சங்கத்தின் பக்தி இலக்கிய மாநாட்டிற்கு 2010-ல் சென்றிருந்த போது நமது 46-வது மகாசன்னிதானம் அவர்க்ள மலேசிய அருள்நெறித் திருக்கூட்டத்தின் சொந்தக் கட்டிட வளாகத்தில் நடந்த நிகழ்ச்சியில் 08.08.2010-ல் பங்கு பெற்று சிறப்பித்தார்கள்.

மலேசிய அருள்நெறித் திருக்கூட்டம் தொடர்ந்து சைவப் பணிக்கும், தமிழ்ப் பணிக்கும் சேவை செய்து வருகின்றது. இது தமது 60-ஆம் ஆண்டு விழாவைக் கொண்டாடவும், சிறப்பிக்கவும் நமது மகாசன்னிதானம் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்களை விரும்பி அழைத்தார்கள். தலைவர் திருமதி. திலகவதி அவர்களும், துணைத்தலைவர் திரு. டத்தோ டாக்டர். வ. கதிரேசன் அவர்களும் அன்புடன் அழைத்திருந்தார்கள். அருள்நெறி அன்பர்களின் அன்பு அழைப்பினை ஏற்று 60-ஆம் ஆண்டு விழாவில் கலந்து கொள்ள இசைவு தந்தருளினார்கள்.

விழாவில் கலந்து கொள்ள 29.04.2016 வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு திருச்சியிலிருந்து மலிண்டோ விமானத்தில் புறப்பட்டு மாலை 5 மணியளவில் கோலாலம்பூர் விமான நிலையம் சேர்ந்தார்கள்.

கோலாலம்பூர் விமான நிலையத்தில் வரவேற்க, மலேசிய அரசு சுகாதாரத் துறை அமைச்சர் மாண்புமிகு டத்தோ டாக்டர். ச. சுப்பிரமணியன் அவர்களின் இளவல் திரு. குமார், அமைச்சரின் செயலர் திரு. எம். சரவணன், திரு. டத்தோ டாக்டர் வ. கதிரேசன், குன்றக்குடி பொட்டாசியம் திரு. எம் ராஜேந்திரன், திரு. ரெங்கா, திரு செந்தில்வாசன் ஆகியோர் வந்திருந்து சிறப்பாக வரவேற்றுத் தங்குமிடத்திற்கு அழைத்துச் சென்றார்கள்.

30.04.2016 சனிக்கிழமை மாலை 6 மணியளவில் கோலாலம்பூரில் பிரசித்திபெற்ற அருள்மிகு கந்தசாமி திருக்கோயிலின் நிர்வாகிகள் பூர்ணகும்ப மரியாதையுடன் வரவேற்பு கொடுத்தார்கள். மாலை 7 மணியளவில் அருள்நெறித் திருக்கூட்டத்தின் 60-ஆம் ஆண்டு விழாவின் முதல்நாள் நிகழ்ச்சி தொடங்கியது. கோலாலம்பூர் லோரங்ஸ்கொட் கலா மண்டபத்தில் இரண்டு நாட்களும் சிறப்பாக நடைபெற்றது. முதல்நாள் நிகழ்ச்சி இறைவழிபாட்டுடன் தொடங்கியது.

வரவேற்புரை திரு. டத்தோ டாக்டர் வ. கதிரேசன் (துணைத்தலைவர், மலேசிய அருள்நெறித் திருக்கூட்டம்), தலைமை உரை திருமதி. முனைவர். க. திலகவதி (தலைவர், மலேசிய அருள்நெறித் திருக்கூட்டம்), ஆசியுரை மகாசன்னிதானம் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்கள் வழங்கினார்கள். மகாசன்னிதானம் அவர்கள் தமிழ், சைவம், பக்திநெறி, அருள்நெறி பற்றி உரையாற்றி ஆசியுரை வழங்கினார்கள். கோலாலம்பூர் திருமுருகன் திருவாக்கு திருபீடம் தவத்திரு பாலயோகி சுவாமிகள் அவர்கள் ஆசியுரை வழங்கினார்கள்.

ஈப்போ திரு. இரா. மாணிக்கம், திரு. சற்குணம் அவர்களின் துணையுடன் மலேசிய அருள்நெறித் திருக்கூட்டம் (ஈபோ கிளை) ஈபோ நித்திய ஜோதி நடனப் பள்ளியினரின் "சிவசக்தி" நாட்டிய நாடகம் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து மலேசிய அருள்நெறித் திருக்கூட்டம் 60-ஆம் ஆண்டு மணி விழா மலர் வெளியிட்டு மலேசிய அரசின் சுகாதாரத் துறை அமைச்சர் மாண்புமிகு டத்தோ டாக்டர் ச. சுப்பிரமணியம் அவர்கள் சிறப்புரையாற்றினார்கள். "மனிதனை, சமுதாயத்தை நல்வழிப்படுத்தி இட்டுச் செல்வதுதான் சமயம் என்றும், மலேசியாவில் கோயில்கள் ஏராளமாக உள்ளன. மக்கள் மனம் ஒரே கோயிலுக்குச் செல்ல சம்மதிப்பதில்லை என்றும், கோயில்களுக்கு மலேசிய அரசு உதவி செய்கிறது என்றும், இந்து சமயம் என்ற பெயரில் சமுதாயத்தை திசை மாற்றி வியாபாரம் செய்யும் இடமாக, மக்களை திசை திருப்புவதுமாக உள்ளது" என்று வேதனையுடன் கூறினார்கள். மேலும் "எல்லோருக்கும் மனம் பக்குவம் பெறல் வேண்டும். அதற்குத் துணை நிற்பது இறைபக்தி. அப்பரடிகள் "நாமார்க்கும் குடியல்லோம்" என்று இறைவன் மீது நம்பிக்கை வைத்து வெற்றி கண்டார். "வேயுறு தோளிபங்கன்.." என்று ஞானசம்பந்தர் பாடல் சொல்வது கோள்களைக் காட்டி ஏமாற்ற வேண்டாம் என்றும், "அன்பே சிவம்" என்ற திருமூலரின் பாடல் அன்புதான் அனைத்தும் என்று விளக்குகிறது என்றும், இன்றைய நாளில் சிவ நம்பிக்கையை இளைஞர்களுக்கு ஊட்ட வேண்டும். அதுவே சமயத் தொண்டாகும் என்றும், மலேசிய அருள்நெறித் திருக்கூட்டம் இந்த நற்பணியைத் தொடர்ந்து செய்து வருகிறது என்றும் பாராட்டி, வாழ்த்திப் பேசினார்கள். முதல்நாள் நிகழ்வு இனிதே நிறைவுற்றது.

இரண்டாம் நாள் நிகழ்வு 01.05.2016 ஞாயிற்றுக் கிழமை காலை சுமார் 9 மணியளவில் இறைவழிபாட்டுடன் தொடங்கியது. திருமுறை ஆசிரியர்களின் திருமுறைக் கச்சேரியும் சிறப்பாக நடந்தேறியது.

வாழ்த்துரை : மலேசிய அரசின் இளைஞர் விளையாட்டுத்துறை அமைச்சர் மாண்புமிகு டத்தோ எம். சரவணன் அவர்கள் "மக்கள் தமக்குத் தெரிந்த மொழியில் இறைவழிபாடு செய்ய வேண்டும்" என்று சொல்லி, "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்" என்ற பாடலுக்கு நீண்ட விளக்கவுரை தந்து திருமுறைகள் நமக்கு வழிகாட்டிகள் ஆகும்" என்றார். மலேசியாவில் கோவில்கள் அதிகரிக்கின்றன. ஆனால் ஆன்மீகம் வளரவில்லை. இது வருத்தமாக உள்ளது. அடியார்களை வணங்குதல் - ஆண்டவனை வணங்குதலாகும். குன்றக்குடி ஆதீனம் அடிக்கடி இங்கு வந்து இங்குள்ளவர்களுக்கு வழிகாட்ட வேண்டும். இந்தப்

பணிகளைச் செய்யும் மலேசிய அருள்நெறித் திருக்கூட்டத்திற்கு வாழ்த்தும், பாராட்டும் தெரிவித்துக் கொள்கின்றேன்" என்று உரையாற்றிச் சிறப்பித்தார்கள்.

அடுத்து நமது மகாசன்னிதானம் அவர்கள் விழாவில் சிறப்புரையாகவும், பேருரையாகவும், ஒரு மணிநேர அளவில் ஆசியுரை வழங்கினார்கள்.

அருள்நெறித் திருக்கூட்டம் தோற்றம், வளர்ச்சி, அதில் 45-வது மகாசன்னிதானம் அவர்கள் மலேசியாவில் தோற்றுவிக்கவிருந்த காலச்சூழல், மலேசியாவில் இந்த இயக்கத்தை வளர்த்தவர்களின் சேவைகளை நினைவுகூர்ந்து பாராட்டினார்கள்.

சமயம், சமுதாயத்தை இட்டு செல்லும் வழி – சமயம் சமுகத்திற்கு நல்லது செய்வதாக இருக்க வேண்டும் என்றும், இன்று உலகம் எந்த வழியில் சென்றாலும் நல்வழிப் படுத்துவது சமயமே. நமது சைவ சமயம் நால்வர் வழியில் வழிகாட்டும் சமயம். இந்தக் கொள்கைகளைச் செவ்வனே செய்து சைவ சமயம், தமிழ்ச் சமுதாயம் வளர 60 ஆண்டுகளாக தொண்டு செய்து வந்தும், வளர்ந்தும் மணிவிழாக் கொண்டாடும் மலேசிய அருள்நெறித் திருக்கூட்டத்தினையும், அதன் தொடக்கக் காலம் முதல் இன்று வரை நன்முறையில் நிர்வகித்துவரும் தொண்டர்களையும் பாராட்டி வாழ்த்திப் பேருரையாற்றினார்கள்.

அதனைத் தொடர்ந்து நமது தமிழாகரர் திரு. சொ.சொ.மீ. சுந்தரம் அவர்கள் "விதியை வெல்லலாம்" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்கள். அது சமய உரையாகவும், திருவாசகத்திற்கு ஒரு விளக்க உரையாகவும் அமைந்தது. அதனைத் தொடர்ந்து அருள்நெறி சமய வகுப்பு மாணவர்களால் "மெய்கண்டார்" குறுநாடகம் நடைபெற்றது.

மலேசிய அருள்நெறித் திருக்கூட்டத்தின் 60-ம் ஆண்டுவிழா பலரின் பாராட்டுகளையும், வாழ்த்துக்களையும் பெற்று இனிதே நடந்தேறியது.

அருள்நெறித் திருக்கூட்டத்தின் 60-ம் ஆண்டு மணிவிழா நிகழ்ச்சிகளில் இரண்டு நாட்களும் நிகழ்ச்சியினை தொகுத்து வழங்கியவர்கள் திருமதி. டாக்டர் அமிர்தவல்லி கணேசன், திருமதி. பாலாமணி ராஜகோபால் ஆவர். இவர்களின் தொகுப்பே ஒரு சிறப்புரை போலிருந்தது. அனைவரின் பாராட்டுதலையும் பெற்றது.

01.05.2016 இரவு அருள்மிகு பத்துமலை முருகன் திருக்கோயிலுக்கு திரு. ரெங்கா, திரு. குமார், திரு. பழநிவேல் ஆகியோர் அழைத்துச் சென்றார்கள். காலம் கடந்து சென்றதால் திருக்கோயில்கள் நடை சாத்தியிருந்தபடியால் வெளியிலிருந்தே வழிபாடு செய்யப்பட்டது. பத்துமலைக் கோயில் இரவு நேர ஒளி அலங்கார அமைப்புப் பார்க்க வேண்டிய ஒரு காட்சியாகும்.

02.05.2016 திங்கள் கிழமையன்று மலேசிய அரசு சுகாதாரத் துறை அமைச்சர் மாண்புமிகு டத்தோ டாக்டர் ச. சுப்பிரமணியன் அவர்கள் தமது இல்லத்திற்கு நமது மகாசன்னிதானம் அவர்களை அழைத்திருந்தார்கள். அமைச்சர் வீடு "புத்ரா ஜெயா"வில் உள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவரின் இளவல்கள் திரு. குமார், திரு. சிவா, திரு. பழநிவேல், திரு. சண்முகம், அமைச்சரின் தாயார் திருமதி. கல்யாணி அம்மாள், அமைச்சரின் துணைவியார் திருமதி. டத்தீன் உமாராணி, மற்றும் குடும்பத்தார்கள் சிறப்பு வரவேற்பளித்து, ஆசிபெற்று மதிய உணவளித்தும் உபசரிப்பு செய்தும் கலந்துரையாடல் நடைபெற்றது. மலேசியாவில் அனைவருக்கும் மருத்துவம் இலவசம், கல்வி இலவசம் என்பது மிகவும் பாராட்டத்தக்கதாகும்.

02.05.2016 இரவு சுமார் 7 மணியளவில் கோலாலம்பூரில் உள்ள அருள்மிகு இராமலிங்கேசுவரர் ஆலயத்தில் வரவேற்பு. அதன் தலைவர் திரு. ஏ. வேலாயுதம் அவர்கள் பூர்ணகும்பப மரியாதையுடன் மகாசன்னிதானம் அவர்களை வரவேற்றார்கள். அன்று "சித்திரை சதயம்" அப்பர் சுவாமிகள் நட்சத்திரம். அப்பரடிகளை நினைத்து அங்கு வழிபாடு செய்து கொண்டு மகாசன்னிதானம் அவர்கள் "அப்பரடிகள் அடிச்சுவட்டில்" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார்கள். டத்தோ டாக்டர் வ. கதிரேசன் அவர்கள் இந்த நிகழ்ச்சியின் அறிமுகவுரையாக நால்வர்களின் திருநெறிய தெய்வத் தமிழை எடுத்துக்காட்டி பேசினார்கள்.

திருமதி. உமா கதிரேசன் ஆச்சி அவர்கள் ஒவ்வொரு நாளும் தொலைபேசி வழி நலன் விசாரிப்பார்கள். சுவாமிகள் அவர்களுக்கு என்ன தேவை என்பதைக் கேட்டு, உபசரிப்புச் செய்து மகிழ்ந்தார்கள்.

மகாசன்னிதானம் அவர்களின் இந்த முறை மலேசியப் பயணத்தின் போது ஆசிபெற்ற அன்பர்கள் டத்தோ வைத்தியலிங்கம் (மலேசிய இந்து சங்கத்தின் முன்னாள் தலைவர்) மற்றும் டத்தோ மோகன்ஷான் (மலேசிய இந்து சங்கத்தின் இந்நாள் தலைவர்), டாக்டர். குமரகுரு. திரு. பரஞ்சோதி, திரு. பழ. பன்னீர்செல்வம், திரு. சிவசண்முகம்,

திரு. ரா. முத்துவேல், விராலிமலை செல்வராஜ். திரு. ஏ. வேலாயுதம்,. குன்றக்குடி தவில் வித்வான் சுப்பிரமணியன், தயாநிதி, தேவகோட்டை தேவிகா, காரைக்குடி வே. ராமசாமி ஆகியோர் ஆவர்.

பத்துமலைக் கோயில், கோட்டுமலை விநாயகர் கோயில் குருக்கள்கள் சிவத்திரு சிவக்குமார் பட்டர், சிவத்திரு சிவானந்த பட்டர் ஆகியோர் திருக்கோயில் பிரசாதம் கொண்டு வந்து கண்டு கொண்டார்கள்.

03.05.2016 செவ்வாய் காலை சுமார் 10 மணியளவில் கோலாலம்பூர் நகரில் உள்ள "நுண்கலைகளின் ஆலயம் மலேசியா" வில் (The Temple of Fine Arts Malaysia) திருமிகு. ச. பழநிவேல் அவர்களின் வழிகாட்டலில் மகாசன்னிதானம் அவர்களுக்கு வரவேற்பு கொடுக்கப்பட்டது. திரு. ச. பழநிவேல் உள்பட அதன் தலைவர் மற்றும் காரியஸ்தர்கள் அனைவரும் வரவேற்புச் செய்தார்கள். மதியம் நல்விருந்தளித்து உபசரித்தார்கள். கலந்துரையாடலில் அவர்கள் நடத்தி வரும் நுண்கலை வகுப்பிற்கு பாடம் நடத்தி தர நல்ல ஆசிரியர் தேவை என்றும் நுண்கலைப் பாடத்திட்டத்திற்கு ஒரு பல்கலைக் கழகத்தின் இணைப்பு பெற்று அதன் வழி சான்று (Diploma) கிடைத்தால் பயிலும் மாணவர்களுக்குப் பெரிய உதவியாக இருக்கும் என்றும், காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகம் உதவ முன்வருமா? என்றும், பல்கலைக் கழகத்துடன் பேசி ஏற்பாடு செய்து தருமாறும் கலந்துரையாடலில் கேட்டுக் கொண்டார்கள். திரு. ச. பழநிவேல் அவர்கள் ஒருங்கிணைப்பாளராக இருப்பார்கள்.

அன்று மாலை 6 மணியளவில் கோலாலம்பூரில் உள்ள தேசிய நிலநிதி கூட்டுறவு சங்கத்தின் (National Land Finance Co-operative Society Limited) பொதுக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பபட்டிருந்தது. மலேசிய அரசு சுகாதாரத்துறை அமைச்சர் மாண்புமிகு டத்தோ டாக்டர் ச. சுப்பிரமணியம் அவர்களின் சிறப்பு ஏற்பாடு இது.

இந்த நிறுவனம் நிர்வாகம் பாராட்டத்தக்க வகையில் அமைந்துள்ளது. கூட்டுறவு தத்துவத்தை சரியாக செய்து வருகிறது. அதன் உறுப்பினர்களுக்கு விவசாயக் கடன், வட்டியில்லா கல்விக் கடன், சிறுதொழில்கள் தொடங்கக் கடன், வீடு கட்ட கடன், சங்க உறுப்பினர் விதவைகளின் வாழ்க்கைக்கு நிதி உதவி, மருத்துவ நிதி உதவி, உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்கு உதவி என்று பல உதவிகளை இச்சங்கம் தனது உறுப்பினர்களுக்குச் செய்து வருகிறது. இதன் சொந்தக் கட்டிடம் 20 மாடி. இச்சங்கம் கூட்டுறவுத் தத்துவம் நன்கு செயல்படும் என்பதற்கு ஒரு உதாரண சங்கமாக விளங்குவது மிகவும் பாராட்டத்தக்கது.

இதன் நிர்வாகக் குழு இயக்குநர்/செயலர் மாண்பிகு டத்தோ பி. சகாதேவன் அவர்களும் மற்றும் நிர்வாகக் குழு உறுப்பினர்களும் மகாசன்னிதானம் அவர்களுக்கு வரவேற்புச் செய்து சிறப்பித்தார்கள்.

இந்தக் கூட்டுறவு சங்கத்திற்குச் சொந்தமான கூட்டக் கலை அரங்கம் குளிர்சாதன வசதி செய்யப்பட்ட மிகவும் பெரிய கலையரங்கம். இந்தக் கலையரங்கில் "நாம் எங்கே போகிறோம்?" என்ற தலைப்பில் மகா சன்னிதானம் அவர்கள் பேருரையாற்ற ஏற்பாடு செய்திருந்தார்கள். நிர்வாக இயக்குநர் மாண்புமிகு டத்தோ பி. சகாதேவன் அவர்கள் வரவேற்புரையாற்றவும், மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் டத்தோ டாக்டர் ச. சுப்பிரமணியம் அவர்கள் அறிமுகவுரையாற்றினார்கள். அதன்பின் மகாசன்னிதானம் அவர்கள் பேருரையாற்றி அனைவரின் கவனத்தையும் ஈர்த்தார்கள்.

"சமயம், சமுதாயம், நாடு, உலகம் இவைகளை மையமாகக் கொண்டு இன்றைய நிலையில் நாம் எப்படி இருக்கின்றோம்? எதிர்காலத்தில் என்ன செய்ய போகிறோம்?" எந்த இலக்கை நோக்கி பயணிக்க வேண்டும்? என்பதற்கு தெளிவாகவும், சிறப்பாகவும் சுமார் ஒரு மணி நேரம் உரையாற்றினார்கள். இந்த முறை மலேசியப் பயணத்தின் நிறைவுப் பேருரையாகவும் இருந்தது. அனைவரும் கேட்டு மகிழ்ந்து பாராட்டினார்கள்.

மலேசியப் பயணத்தின் அனைத்து நாட்களிலும் உடனிருந்து நமது குன்றக்குடி பொட்டாசியம் ராஜேந்திரன் அவர்கள் மிகவும் உதவியாக இருந்தார். திரு. ச. குமார். திரு. ரெங்கசாமி (எ) ரெங்கா அவர்கள் வழிகாட்டியாகவும், நல்ல காரோட்டியாகவும் இருந்து உதவி செய்தார்கள்.

04.05.2016 புதன்கிழமை காலை 6 மணிக்கு தாயகம் புறப்பாடு. டாக்டர் கதிரேசன், திருமதி. கமலா கதிரேசன் ஆச்சி, திரு. ராஜேந்திரன், திரு. குமார், திரு. ரெங்கா ஆகியோர் வழியனுப்பி வைத்தார்கள். திரு. ராஜேந்திரன், திரு. குமார், திரு. ரெங்கா ஆகியோர் விமான நிலையத்திற்கு உடன் வந்திருந்தார்கள். கோலாலம்பூர் விமான நிலையப் பணியாளர் திரு. ஜெ. செந்தில்வாசன் அவர்கள் உடனிருந்து பயணத்தின்போது உதவி செய்து விமானம் வரை வந்து வழியனுப்பி வைத்தார்கள். மலிண்டோ விமானம் காலை 8.30 மணிக்கு (மலேசிய நேரம்) புறப்பட்டு காலை 9.30 மணிக்கு (இந்திய நேரம்) திருச்சி விமான நிலையம் வந்து சேர்ந்தது. அங்கிருந்து குன்றக்குடி வந்து, காளத்திநாதர் வழிபாடு, குரு வழிபாடு செய்துகொள்ளப்பட்டது.

- செய்தி : சு. செல்வராஜ

தமிழால் வென்றவர்

ஐ.ஏ.எஸ். என்ற வெற்றிச் சிகரத்தை தமிழ் ஏணி கொண்டு எட்டிப் பிடித்திருக்கிறார். இளைஞர் சரவணன்.

அரசுப் பள்ளியில் தமிழ் வழியில் படித்த சரவணனுக்குப் பிடித்த பாடம், தமிழ். ஐ.ஏ.எஸ். தேர்வுக்கு இவர் தேர்வு செய்த விருப்பப் பாடம் தமிழ் இலக்கியம், முதல்நிலைத் தேர்வு எழுதியதும், நேர்முகத் தேர்வில் பதில் அளித்ததும் தமிழில் தான்.

பொங்கும் அறிவு இருக்கிறது. ஆனால் போதிய ஆங்கில அறிவு இல்லையே என்று தயங்கி நிற்கும் கிராமப்புற மாணவர்களுக்கு ஒரு நம்பிக்கை நட்சத்திரமாய் நிமிர்ந்து நிற்கிறார் சரவணன். அது மட்டுமல்ல, சரவணனின் வாழ்க்கையே பல அசாதாரணங்களின் தொகுப்புதான். அதுபற்றி, சரவணனே சொல்லக் கேட்போம்...

கூலித்தொழிலாளர் பெற்றோர்

ஈரோடு மாவட்டம் மயிலம்பாடி அருகே உள்ள காந்திநகர் என்ற சிற்றூர்தான் எனது சொந்த ஊர். அப்பா செல்வன், அம்மா பாப்பாள் இருவரும் விவசாயக் கூலித் தொழிலாளர்கள். ஒரே அக்கா மகேஸ்வரி. மயிலம்பாடி அரசு உயர்நிலைப் பள்ளியில்தான் 10-ம் வகுப்பு வரை படித்தேன். படிப்பில் இயல்பான ஆர்வம் இருந்ததால், ஒவ்வொரு வகுப்பிலும் முதல் மாணவனாகத் திகழ்ந்தேன்.

மாநிலத்தில் முதலிடம்

பத்தாம் வகுப்பில், அறிவியல் கணிதப் பாடங்களில் தலா 100 மதிப்பெண்களுடன் 481 மதிப்பெண்கள் பெற்றேன். தாழ்த்தப்பட்ட சமூக மாணவர்களில் மாநிலத்திலேயே முதலிடம். அதற்காக, ஆதிதிராவிடர் நலத்துறை சார்பில் நடைபெற்ற விழாவில், முதல் அமைச்சர் ஜெயலலிதா கையால் ரூ. 10 ஆயிரம் பரிசுத்தொகையும், பாராட்டுச் சான்றிதழும் பெற்றேன். மாவட்ட அளவில் முதலிடம் பெற்றதால் தினத்தந்தி நாளிதழ் பரிசும் எனக்குக் கிடைத்தது.

விழுந்த விதை

2005-ம் ஆண்டு, அப்போதைய ஈரோடு மாவட்ட கலெக்டர் கார்த்திகேயன் எனக்குப் பரிசு வழங்கிப் பாராட்டியபோது, நாமும் ஓர் ஐ.ஏ.எஸ். அதிகாரி ஆக வேண்டும் என்ற முதல் விதை எனக்குள்

பிரிண்டிங் சரியில்லை

விழுந்தது. மாவட்ட அளவில் முதலிடம் பெற்ற மாணவன் என்பதால் 11-ம் வகுப்பில் அந்தியூர் ஆதர்ஷ் வித்யாலயா பள்ளி எனக்கு இடமளித்தது. பனிரெண்டாம் வகுப்பிலும் 1130 மதிப்பெண்கள் பெற்றேன். மதிப்பெண்கள் அடிப்படையில் பொறியியல், மருத்துவம் இரண்டிலும் சேருவதற்கான தகுதி எனக்கு இருந்தது.

புதிரான எதிர்காலம், புதிய வெளிச்சம்

என்னை பட்டப் படிப்புக்கு அனுப்பும் பொருளாதார நிலை வீட்டில் இல்லை. எதிர்காலம் குறித்து குழம்பி மயங்கி நின்றிருந்தேன். அந்நிலையில் தோன்றிய திடீர் யோசனையில், ஒரு நோட்டு தாளைக் கிழித்து எடுத்து, அதில் எனது நிலை குறித்து முதல் அமைச்சர் ஜெயலலிதாவுக்கு கடிதம் எழுதினேன். சாதாரண தபாலில் தான் அதை அனுப்பினேன். ஆனால் ஒரு வாரத்தில் சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து எனக்கு அழைப்பு வந்துவிட்டது. முதல் - அமைச்சர் என்னிடம், 'நீ படிக்க விரும்பும் படிப்பைப் படி... உனக்குத் தேவையான உதவியை அரசு செய்யும்' என்றார். பளிச் என்று ஒரு புதிய வெளிச்சக் கதவு திறந்ததுபோல எனக்கு இருந்தது.

ஏரோநாட்டிக்கல் என்ஜினியரிங்

தமிழக அரசின் உதவியோடு நான் அண்ணா பல்கலைக்கழகத்தின் எம்.ஐ.டி.யில் ஏரோநாட்டிக்கல் என்ஜினியரிங் படிப்பில் சேர்ந்தேன். அதில் நான் 80 சதவீதத்துடன் தேர்ச்சி பெற்றேன் என்றாலும், அந்த நான்கு ஆண்டு காலமும் என் மனதில் ஐ.ஏ.எஸ். கனவுதான் ஓடிக் கொண்டிருந்தது. ஆனால் குடும்பச் சூழல் காரணமாக, நான் உடனடியாக அந்த முயற்சியில் இறங்க முடியாத நிலை. எனவே, முதலில் நாம் நமது பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்திக் கொள்வோம் என்ற எண்ணத்தில் பெங்களூருவில் உள்ள ஒரு பிரபல மென்பொருள் நிறுவனத்தில் பணியில் சேர்ந்தேன். கவுரவமான வேலை. கை நிறைய சம்பளம்... ஆனால் நான் இரண்டே ஆண்டுகளில் அந்தப் பணிக்கு விடை கொடுத்துவிட்டேன். எனக்குள் தீயாய் கனன்று கொண்டிருந்த ஐ.ஏ.எஸ். லட்சியம்தான் காரணம். குடும்பத்தில் எனது சில பொறுப்புகளை நிறைவேற்றிய பிறகு, ஐ.ஏ.எஸ். நோக்கி எனது பயணத்தைத் தொடங்கினேன்.

தமிழக அரசு மையம்

2013-ம் ஆண்டில் வேலையை ராஜினாமா செய்த நான், சென்னையில் உள்ள தமிழக அரசின் அண்ணா நூற்றாண்டு குடிமைப்பணிகள்

பயிற்சி மையத்திலும், சைதை துரைசாமியின் மனிதநேய மையத்திலும் யு.பி.எஸ்.சி. தேர்வுக்காக இலவசப் பயிற்சி பெறத் தொடங்கினேன். இங்கு பயிற்சி மட்டுமின்றி, உணவு, தங்கும் இடமும் இலவசமாக அளித்ததால், என்னால் பணப் பிரச்சினை இல்லாமல் முழுக்க முழுக்க தேர்வுக்கான தயாரிப்பில் கவனம் செலுத்த முடிந்தது.

நான் எப்போதும் நாளிதழ்களை விரும்பிப் படிப்பேன். ஐ.ஏ.எஸ். தேர்வுக்குத் தயாராகும் நிலையில் தமிழ், ஆங்கில நாளிதழ்களை மேலும் ஊன்றிப் படித்தேன். அவற்றில் இருந்து முக்கிய விஷயங்களை குறிப்பெடுத்துக்கொண்டேன். இந்தியப் பொருளாதாரம், அரசியல், வரலாறு, புவியியல், கணிதம் என்று எனக்குத் தேவையான புத்தகங்கள் அனைத்தும் மேற்கண்ட மையங்களிலேயே இருந்தன. என்ன ஒன்று, நான் தமிழில் தேர்வு எழுதத் தீர்மானித்ததால் ஆங்கிலத்தில் இருந்த தகவல்களை தமிழில் மொழிபெயர்த்துக் கொள்ள வேண்டியிருந்தது. அதற்காக நான் கொஞ்சம் கூடுதலாக உழைத்தேன். நாம் இஷ்டப்பட்டு கஷ்டப்படும்போது அது கஷ்டமாகவே தெரியாது என்பதை நேரடியாக உணர்ந்தேன்.

ஐ.ஆர்.எஸ். தேர்வு

2014-ம் ஆண்டு யு.பி.எஸ்.சி. தேர்வு எழுதிய நான், முதல் முயற்சியிலேயே 995-வது ரேங்க் பெற்று ஐ.ஆர்.எஸ். பணிக்கு தேர்வானேன். அரியானா மாநிலம் பரிதாபாத்தில் உள்ள "நேசன்" எனப்படும் தேசிய அகாடமியில் ஐ.ஆர்.எஸ். பயிற்சி பெறத் தொடங்கினேன். ஆனால் அப்போதே, பயிற்சி நேரம் போக மற்ற நேரங்களில், ஐ.ஏ.எஸ். நோக்கி என்னை நான் தயார்படுத்திக்கொண்டே இருந்தேன். இந்த ஆண்டு 366-வது ரேங்க் பெற்று ஐ.ஏ.எஸ். தேர்வாகி இருக்கிறேன். என்னை ஆளாக்கிய தமிழ்நாட்டு மக்களுக்கு சேவையாற்ற விரும்புவதால், எனக்கு தமிழ்நாடு "கேடர்" கிடைக்கும் என்று ஆவலோடு எதிர்பார்க்கிறேன்.

தடைகள் விலகும்... உதவிகள் நீளும்

கிராமப்புற மாணவர்கள் தங்கள் சூழல், ஆங்கிலத்தில் சரளமின்மை குறித்து கவலை, அச்சப்படத் தேவையில்லை என்பதே எனது ஆலோசனை. ஐ.ஏ.எஸ். தேர்வு என்றில்லை, உங்களின் எந்த இலக்கிலும் நீங்கள் உறுதியாக இருந்தால் இறுதியில் நிச்சயம் வெற்றி கிட்டும். இது நான் உணர்ந்து சொல்லும் செய்தி. தடைகள், இடையூறுகளை நினைத்துக் கலங்காதீர்கள்.நீங்கள் திடமாக முன்னேறினால், தடைகள் தானே விலகும். உதவிகள் நீளும். எனக்கு டெல்லியில் நேர்முகத் தேர்வில்

பங்கேற்பதற்கு ஆடைகூட வாங்கிக் கொடுத்து, விமான டிக்கெட் எடுத்துக் கொடுத்து தமிழ்நாடு இல்லத்தில் தங்கும் வசதி செய்து கொடுத்துவிட்டார்கள் என்றால் பாருங்களேன்.

என் கடன்

மக்களின் வரிப்பணத்தில் நான் படித்திருக்கிறேன். ஓர் ஐ.ஏ.எஸ். அதிகாரி ஆகியிருக்கிறேன். அவர்களுக்கு நான் பட்டிருக்கிற கடனை முழுமையாக அடைக்க முடியாது என்றாலும், நேர்மையாக, செம்மையாக என்னுடைய பணியைச் செய்வதை எனது தார்மீகக் கடமையாகக் கருதுகிறேன். ஓர் ஐ.ஏ.எஸ். அதிகாரியாக அரசாங்கம் அளிக்கும் எந்தப் பொறுப்பையும் ஏற்க வேண்டும் என்ற போதும், கல்வி ஒருவரது வாழ்க்கையை எந்த அளவு மாற்றும் என்பதை அனுபவபூர்வமாக உணர்ந்திருப்பதால் கல்வித் துறையில் பணியாற்ற ஆசை.

தனிமனித வெற்றியல்ல

தற்போது இந்தக் கணத்தில் எனது 11 ஆண்டுகால கனவை நனவாக்கி இருக்கிற மகிழ்ச்சி எனக்குள் மிதக்கிறது. ஆனால் அதையும் தாண்டி, என்னைப் போன்ற சாதாரண சூழ்நிலையில் இருந்து வருபவர்களும் சாதிக்கலாம் என்பதை எனது சக கிராமத்து மாணவர்களுக்கு எடுத்துக் காட்டிய சந்தோஷம் கூடுதலாக இருக்கிறது. அதேபோல, இது எனது ஒரு தனிமனிதனின் வெற்றியல்ல. எனக்கு அர்ப்பணிப்போடு கற்றுக் கொடுத்த அரசுப்பள்ளி ஆசிரியர்கள், என்மீது நம்பிக்கை வைத்து ஊக்கமளித்த எனது குடும்பத்தினர், அக்கா - மாமா, "எங்க மாமா ஐ.ஏ.எஸ். ஆகணும்" என்று சாமி கும்பிடும்போதெல்லாம் வேண்டிக்கொண்ட அக்காவின் குழந்தைகள் எனக்கு உதவிகரமாய் இருந்த, சக ஐ.ஆர்.எஸ். பயிற்சி பெற்றவர்கள், எனக்கு இலவசப் பயிற்சி அளித்த தமிழக அரசு, மனிதநேய மையங்கள், டைம் அகாடமி என்று பலரின் அன்பும், அக்கறையும், பிரார்த்தனையும்தான் என்னை இங்கு கொண்டு வந்து நிறுத்தியிருக்கின்றன.

எல்லாவற்றும் மேலாக, எங்கோ குக்கிராமத்தில் இருந்த என்னை, முதல் - அமைச்சர் தனது ஆயிரம் அலுவல்களுக்கு இடையில், தொடர்ந்து பல ஆண்டுகள் அக்கறையோடு கவனித்து கனிவோடு உதவி செய்து வந்திருக்கிறார். ஐ.ஆர்.எஸ். தேர்வு பெற்றபோதே நன்றி தெரிவிக்க ஆசைப்பட்டேன். இயலவில்லை. தற்போது ஐ.ஏ.எஸ். வெற்றியை அர்ப்பணித்து ஆசீர்வாதம் பெற விழைகிறேன். உற்சாகமாகப் பேச ஆரம்பித்த சரவணன் நெகிழ்வோடு கூறி முடிக்கிறார்.

நன்றி : தினத்தந்தி 11.6.2016

சிந்தனை வட்டம்

மலர் 31 ல்

I. "அன்பே வழ்வு" என்ற திருமுகத்தில், ஜவான்கைமடங்கிய செய்தியும், அன்பர்களின் கை நீண்ட செய்தியும், பள்ளி மாணவர் பேட்ஜ் செய்தி சம்பவங்களும், "நேற்றுவிழுந்துவிட்டால் என்ன" இன்று "எழுந்துநில்" என்ற விக்டர் ஹியூகோ பொன்மொழி பொலிவுபெற்று அடிகளின் கைவண்ணம் மண்ணை விண்ணாக்குகிறது.

II. தமிழாகரரின் "சீற்றமும் மாற்றமும்" சிந்தனையில் திங்கள், மழை, சூரியன் மூன்றின் எச்சமாக, முறையே, தேய்வு, குறைவு, எப்போதும் ஒளிர்தல் காட்டி, சோழன் இளங்கோவால் சிறப்பிக்கப்பட்டான் என்று குறிப்புப் பொருள் வழங்கிய கட்டுரை அற்புதம்.

III. என் கட்டுரையில் "விச்சிமலை" பற்றி தமிழாகரர் கூறியது சரியாகத் தோன்றவில்லை. கொங்குநாட்டுப் பச்சைமலையை "விச்சிமலை" இதன் வழியாகவே காவிரி பாய்கிறது. எதற்கும் இலக்கண அமைதி கூறலாம். மலை தழுவி காவிரி பாய்ந்து வருவதற்காகக் கொள்வதே என் கருத்து. விச்சிமலை சேரர்க்குரியது அன்று. "விச்சிகோ" என்ற சிற்றரசர்க்கு உரியது. கொங்கு நாட்டு முதன்மை நாட்டும் இம்மலை சேரர்க்குரியதன்று. மலைத் தொடர்பையே சுந்தரர் அருளுகிறார் என்பது என் கருத்து.

– தா. குருசாமி தேசிகர்,

"நீ என் வாழ்க்கையில் இனிமையை ஏற்படுத்தினாய்" என்ற வாசகம், மாணவனை மாற்றிய மாணவன் மூலம் இளநிலை அதிகாரியை மாற்றியது, அதிகாரி மூலம் மேலாளரை மாற்றியது, மேலாளர் மூலம் மகளை மாற்றி, தற்கொலை செய்வதில் இருந்த மகளை காப்பாற்றியது எனவே இன்சொல் பேசவேண்டும், அன்பு காட்ட வேண்டும், என்ற அடிகளாரின் தலையங்கம், உலகியல் உண்மை.

– வ. பழனிக்குமார், கண்டவராயன்பட்டி

"ஒரு நல்ல சொல் தொடர்ச்சியாக மகிழ்ச்சி அதிர்வுகளை ஏற்படுத்தும்" என்பதையும், "ஒரு சின்ன சொல் எவ்வளவு

மாற்றங்களை ஏற்படுத்தும்" என்பதையும், மையமாக கொண்ட நல்ல உலகியல் நிகழ்வுகளைப் படம் பிடித்தது போல் சமூகம் எழுதிய ஆசிரியர் பக்கக் கட்டுரை மிகச் சரியான வழிகாட்டுகிறது.

உலகத் திருக்குறள் பேரவைத் தஞ்சை கிளை சார்பில் வணக்கத்திற்குரிய மௌனசுவாமிகள் அவர்களுக்கு, "குறள்நெறிச் செம்மல்" விருது சமூகம் வழங்கிய நிழல்படம் பார்த்துப் பெரிதும் மகிழ்ந்தேன். 03.02.2016 அன்று விசய அச்சம்பாடு - நம் பள்ளிக்கும் புதிய கட்டடவரிசை திறந்து வைத்து சிறப்பித்த அட்டைப் படம் பார்த்து மிக மகிழ்ந்தேன்.

– க. கதிரேசன், பூவாளூர்

திருக்குறள் தமிழினத்தின் தனி மறை!

வள்ளுவம் வையகத்தின் வரலாற்றுச் சந்திப்பில் பிறந்தது. தமிழினத்தின் வீழ்ச்சியைத் தடுத்து நிறுத்தப் பிறந்தது. ஓரினத்தை அழிவு வராமல் பகைப்புலத்தில் காக்கும்போர் வீரனைவிட வாழ்வியல் நெறியில் நயத்தக்க நாகரிகத்தினைக் கட்டிக் காப்பாற்றிய வள்ளுவர் போற்றுதற்குரியர்.

வேற்றுமை என்பதை மறந்தும்கூடக் காட்டாது. இனம், மொழி, சமயம் ஆகிய வேறுபாடுகளைக் கடந்து பொது நிலையில் தோன்றிய நூல், மக்களாகப் பிறந்தோர் பேசும், வேறு எம்மொழிகளிலும் இல்லை. தமிழில் உள்ள திருக்குறள்தான் அத்தகைய சிறப்புடைய நூல்.

திருவள்ளுவர் அருளிச் செய்த திருக்குறள் தமிழின்த்தின் தனி மறை; உலகப் பொதுமறை.

திருக்குறள் காட்டும் குலம், திருக்குறள் காட்டும் குடி திருக்குறள் காட்டும் இனம் ஆகியன நாட்டுவழிப்பட்டதல்ல. பிறப்பின் வழிப்பட்டதல்ல. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நாடு, இன, மொழி வேறுபாடுகளைக் கடந்து மனிதர் எங்கு பிறந்தாலும் ஒத்த உரிமையுடையவர்கள் என்று முழங்கியது திருக்குறள்.

திருக்குறள் ஒரு இலக்கியம் மட்டுமன்று; அது ஒரு அரசியல், பொருளாதார, சமூக அறிவியல் நூல்.

உபதேசம் நீதிக்குத் துணை செய்யாது, பாபத்தை நீக்கப் புண்ணியத்தை வழங்கத் தோன்றிய வழிபாட்டுக் கூடங்கள் பணம் பேரம் பேசும் வணிக நிலையங்களாக உருமாறிவிட்டன. சமூகத்தால்தான் மனிதன் கெடுகிறான்.சிவிகையில் ஊர்வதையும், சிவிகையைச் சுமப்பதையும் கண்டு, இது அறத்தின் பயன் என்று எண்ண வேண்டாம்.

– அருள்நெறித்தந்தை (மண்ணும் மனிதர்களும் பக்கம்.170)

உ

ஸ்ரீ நொண்டிக்கருப்பர் துணை



சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டம், அரியக்குடியில் குடிகொண்டு அருள்வழங்கும் அனைத்து சமூகத்தினருக்கும் இஷ்ட தெய்வமான **ஸ்ரீ நொண்டி அய்யா** மற்றும் **பரிவார தெய்வங்களுக்கும்** அமராவதிபுதூர் நகரத்தார் பங்காளிகளுக்கு பாத்தியப்பட்ட **ஸ்ரீ குப்பாள் ஆச்சி** உள்ளிட்ட தெய்வங்களுக்கும் நிகழும் மங்களகரமான துர்முகி வருடம் ஆடிமாதம் 25ஆம் நாள் **செவ்வாய்க்கிழமை** அன்று சிறப்பு வழிபாடும், **அன்னதானமும்** நடைபெறும். மெய்யன்பர்கள் வந்து வழிபட்டு திருவருள் பெற வேண்டுகிறோம்.

விழா சிறப்பாக நடைபெற தங்களுடைய அன்பான நன்கொடைகளை வழங்க வேண்டுகிறோம்.

இப்படிக்கு

ஸ்ரீ நொண்டி கருப்பர் ஆலய அறக்கட்டளை

நன்கொடை அனுப்ப :


SRI NONDI KARUPPAR ALAYA TRUST

UCO BANK, ARIYAKUDI BRANCH

SB.A/C. No. 20940110034965 (IFSC CODE : UCBA0002094)

Cell : 9710524058


S.சித்தநாதன்


OWN YOUR HOME
AND ENCASH IT TOO
Eligibility Criteria
• Above 60 Years (Joint borrowing with spouse less than 60 years also)
• Owners of self acquired and self occupied residential property
Terms
• Mortgage of residential property in favour of Bank
• Loan amount based on the property value assessed by the bank
• Attractive monthly annuity
• Facility to avail lumpsum amount is available upto 20% of eligible loan amount to meet medical expenses
• Loan period of 15 years with provision to roll over
• Fresh terms applicable at the time of roll over
• Pre-closure option available without any charges
For further details please contact our nearest branch :
INDIAN BANK
REVERSE
MORTGAGE
FOR SENIOR CITIZENS
INDO ARYAN
▪ H.O.: 66, Rajaji Salai, Chennai 600 001
▪ Toll Free No.: 1800 425 1400
▪ Email : indbank@vsnl.com
इंडियन बैंक
Indian Bank
Taking Banking Technology to the Common Man

BOOK POST
Book pocket containing printed matter
MAKKAL CHINTHANAI-May-July 2016

Price Rs. 8-00
Date of Publication 01-07-2016

பெறுநர்

திரு திருவருள்திரு சுவாமிகள் அவர்கள்,
கோவிலூர் ஆதீனம்,
கோவிலூர்,
மானகிரி-(அஞ்சல்),
காரைக்குடி-(வழி),



அச்சிட்டோர் சண்முகநாதன் அச்சகம், குன்றக்குடி ✆ : 264166